விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 23 புதன்கிழமை (09.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355







## அரச உயர்மட்டக்குழு இன்று இந்தியா விரைவு

# ஜனாதிபதித் தேர்தலில் அவசரப்பட்டு ஆதரிக்கும் முடிவை எடுக்க வேண்டாம்

## த.தே. கூட்டமைப்புக்கு இந்தியத் தூதுவர் ஆலோசனை

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரப் பட்டு எடுக்கக் கூடாதென இலங்கைக்கான இந் தியத் தூதுவர் அசோக்காந் தெரிவித்துள் ளார்.**

*(16ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதி இன்று யாழ். வருவார்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மாகாணத்திற்கு இன்று விஜயம் செய்ய வுள்ளதாக ஜனாதிபதி செயலக அதி காரி நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற வுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல் வழங் கும் தேசிய வைபவத்திலும் அவர் கலந்து கொள்வார் என ஜனாதிபதி ஊடகபிரிவின் இணைப்பாளர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை இன்றைய தேசிய வைபவத்தை முன் னிட்டு யாழ்.வேம்படி மகளிர் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ். மாவட்டத்தில் 'டெங்கு' தீவிரம் 'மரண அபாயம்' என எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரு வா ரங்களில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரம் அடைந்துள்ளது. 60 இற்கும் மேற்பட்ட நோயா ளர்கள் கடந்த இருவாரங்களில் டெங்கு நோயு டன் இனங்காணப்பட்டுள்ளார்கள். குறிப்பாக யாழ். நகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களி லும் சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதிகளிலும் இந்நோயின் தாக்கம் அதிகமாக காணப்படு வதுடன் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இந்நோய் பரவலாகக்காணப்படுவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

இந் நோய் மேலும் தீவிரமாக பரவி பலத்த பாதிப்பை ஏற்படுத்தலாம் இந் நோயை கட் டுப்படுத்த அனைத்து தரப்பினர்களதும் பூரண ஒத்துழைப்பு *(16ஆம் பக்கம் பார்க்க)*

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாதக் காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை 74 மேல திக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப்பிரேரணைக்கு ஆதரவாக 95 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## நவம்பர் 23இற்கு பின் வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள் ரத்து

### தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடிய ரசின் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு முர ணாக தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் கூட் டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் உள்ளிட்ட அரச மற்றும் மாகாண நிறுவனங்களின் ஆட்சேர்ப்புக்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் இடம்பெறுவதாகத் தேர்தல் கள் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவையாவும் செல்லுபடியற்றதாகும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள் ளது. இவை தொடர்பில் தேர்தல்கள் திணைக் களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியலமைப் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## தபால் மூலம் வாக்களிப்பிற்கு படையினர் அதிக ஆர்வம்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு திகதி அறிவிக்கப்பட்ட நிலை யில், யாழ். மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் என் றும் இல்லாதவகையில் இம் முறை அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பப் படிவங்களை பதிவு செய்வதற்காக யாழ். மாவட்ட செயலக தேர்தல் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையிலுள்ள அரசி யல் அகதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி சாகும் வரையிலான உணவுத் தவிர்ப் புப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் சிங் கள இனத்தைச் சேர்ந்த ஒருவரும் பெண் ஒரு வரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. *(16ஆம் பக்கம் பார்க்க)*

## திருமலையில் இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்

### நாடாளுமன்றத்தில் இரா.சம்பந்தன் காட்டம்

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்று வரும் இந்து மதத்திற்கு எதிரான நடவடிக் கைகளை யும் இராணுவ மயமாக்கல் நிலைமையும் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத் துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அவசர காலச் சட்ட பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## பூநகரி கரச்சிப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதம் 26 ஆம் திகதி இடம்பெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பூநகரி, கரச்சி பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக அங்கு வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் தொகுதியி லுள்ள பச்சிலைப் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## வேட்பாளர்களைச் சந்திக்கவே றொபேட் ஓ பிளேக் வந்தார்

(கொழும்பு)

அரச தலைவருக்கான தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்களை சந்திப்பதே அமெரிக்க துணை வெளியுறவு செயலாளரின் விஜயத் தின் முக்கிய நோக்கம் என இராஜதந்திர வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் அமெரிக்க தூதுவரும் மத்திய மற் றும் தெற்கு ஆசிய பிராந்தியத்திற்கான துணை வெளியுறவு *(16ஆம் பக்கம் பார்க்க)*


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## எக்கநாயக்காவும் கட்சி தாவினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தமித்திர எக்கநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பின் இருக்கைக்கு மாறினார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தென்னிலங்கையில் அரசியல் கட்சி உறுப்பினர்கள் கட்சி தாவி வருகின்றனர். இந்த வரிசையில் நேற்று எக்கநாயக்கவும் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவை சந்தித்த எக்கநாயக்கா ஐ.தே. கட்சியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## வேலையற்ற பட்டதாரிகளின் கவனஈர்ப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்பினை விரைவில் வழங்கக் கோரி கவன ஈர்ப்பு நிகழ்வு ஒன்றை இன்று புதன்கிழமை காலை 9.30மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் நடத்தவுள்ளனர்.

கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவின் யாழ்.விஜயத்தையொட்டி இந்த கவன ஈர்ப்பு நிகழ்வை நடத்தவுள்ளதாகவும், அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (ஓ-9)

# இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தோரின் குடியுரிமையை இரத்துச் செய்ய வேண்டும்!

## அமெரிக்க செனட் குழு பரிந்துரை

(வாஷிங்டன்)

இலங்கையில் யுத்தக் குற்றம் புரிந்தவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களின் குடியுரிமைகளை இரத்துச் செய்வதுடன், விசா வழங்கும் நடைமுறைகளையும் இறுக்க வேண்டுமென அமெரிக்க செனட் பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பாக அமெரிக்க செனட் தயாரித்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை உடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா காத்திரமான பங்களிப்பினை வழங்க வேண்டும்.

எனினும் மனித உரிமை விவகாரங்களில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

வரலாற்று ரீதியாக கொழும்பிற்கும், வாஷிங்டனுக்கும் இடையில் பல்வேறு உறவுகள் பேணப்பட்டு வந்த போதிலும் அண்மைக் காலமாக இலங்கை சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இயற்கையாக இலங்கையின் அமைவிடம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் அதனால் அந்த நாட்டுடனான உறவுகளை துண்டித்துக் கொள்வது புத்தி சாதுரியமான தீர்வாக அமையாது.

ஒபாமா நிர்வாகம் இலங்கை தொடர்பாக பரந்துபட்ட வலுவான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

அது இலங்கையின் புதிய அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தத்தையும் அமெரிக்காவின் பூகோள நலன்களையும் கருத்திற் கொள்வதாக அமையவேண்டும்.

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளுக்குத் தொடர்ந்து உதவ வேண்டும்.

மீள்குடியேற்றம் வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணியாக அது அமையும்.

2010இற்கான சாத்தியமான மீள்குடியேற்றத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளுடனும், இலங்கை அரசுடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் நட்புறவுப் பாலத்தினை உருவாக்குவதற்காக மக்கள் மத்தியிலான நல்லிணக்கத் திட்டங்களை ஊக்குவிக்கவேண்டும்.

அமெரிக்காவின் உதவியை இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் விஸ்தரிப்பது அவசியம்.

குறிப்பாக தென் மற்றும் மத்திய பகுதிகளுக்கும் உதவிகளை வழங்குவதன் மூலம் அமெரிக்காவின் உதவியிலிருந்து சிங்கள சமூகமும், ஏனையவர்களும் நலமடையும் நிலையும் சமாதானத்தின் பலாபலன்களை அனுபவிக்கும் சூழலும் உருவாகும் என்றும் செனட் வலியுறுத்தியுள்ளது. (ந-5)

## யாழ்.தேர்தல் கடமையில் 7ஆயிரம் பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்.மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையங்களில் 7ஆயிரத்துக்கு மேற்பட்ட பணியாளர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை வெளிமாவட்டத்தில் இருந்து 125பணியாளர்கள் தேர்தல் கடமைக்காக நிறுத்தப்பட உள்ளதாக யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஸ்சுதாகரன் தெரிவித்துள்ளார். (ந-7)

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு உதவ சர்வதேச வணிகர் கழகம் உறுதி

## யாழ்.அரச அதிபரிடம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுப்பதற்கு தயார் என இலங்கைக்கான சர்வதேச வணிகர் கழகம் யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான சர்வதேச வணிகர் கழகத்தின் தலைவர், உதவிப் பொது முகாமையாளர் உள்ளிட்ட 30பேர் கொண்ட குழுவினர் நேற்று மாலை அரச அதிபர் க.கணேஷை செயலகத்தில் சந்தித்தனர்.

இச் சந்திப்புத் தொடர்பில் யாழ்.அரச அதிபர் தகவல் தருகையில், இலங்கைக்கான சர்வதேச வணிகர் கழகத்தின் 30பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் யாழ்.மாவட்ட நிலை தொடர்பில் ஆராய நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இக்குழுவினரில் கட்டுமானங்கள், பாலங்கள் புனரமைப்பு, வீதிகள் புனரமைப்பு, பாரிய இயந்திரங்கள், கடல்வளத்துறை, விவசாயத்துறை, உர உற்பத்தி நிறுவனம், இந்திய அரச வங்கி உள்ளிட்ட பல துறைகளைச் சார்ந்த பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.

இக் குழுவினர் யாழ்.மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள பாரிய அபிவிருத்தித்திட்டங்களில் தம்மால் பங்கெடுக்க முடியுமென என்னிடம் தெரிவித்து உள்ளனர்.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில்மேற்கொள்ள திட்டமிடும் பாரிய அபிவிருத்திப் பணிகளுக்கு இலங்கைக்கான சர்வதேச வணிகர் கழகத்திடம் முன்மொழிவுகளைவழங்குவோம் என யாழ். அரச அதிபர்க.கணேஷ் குறிப்பிட்டார். (ந)


## வீட்டுக் கிருத்திய அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர்

ஐயாத்துரை பாலரத்தினம்

9.11.2009 அன்று சிவபதமடைந்த அமரர் ஐயாத்துரை பாலரத்தினம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று 9.12.2009 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

இல.10, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(4151)



## ஐந்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சுவிஸ் மினரல் நடத்தும் கட்டுரைப் போட்டி

சுவிஸ் மினரல், யாழருவி, நிறுவனத்தின் ஐந்தாவது வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு எங்கள் நிறுவனத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தும், நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் வாழ்த்தியவர்களுக்கும், எமது நிறுவனம் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு நீங்கள் அனைவரும் வழங்கிய வாழ்த்துக்கள் எம்மை பூரிப்பில் ஆழ்த்தியதுடன் புதிய உற்சாகத்தையும் எமக்கு தந்துள்ளது.

மேலும் யாழ். குடாநாட்டில் சமூகவிழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கட்டுரைப் போட்டியை யாழ். குடாநாட்டு மக்களுக்கிடையே நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். எனவே பின்வரும் தலைப்பின் கீழ் 500 சொற்களுக்கு குறையாமல் எழுதி 31.12.2009ற்கு முன்னர் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. யாழ்ப்பாணக் கிணறுகள்
2. நீரின்றி அமையாது உயிர்
3. யாழருவி

தங்களால் எழுதி அனுப்பப்படும் கட்டுரைகளினுள் சிறந்த கட்டுரைகளுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

### மற்றும் உள்ளூர் உற்பத்தியாளருக்கு

நாம் எமது நிறுவனத்தின் 5ஆவது வருட நிறைவு விழாவில் குறிப்பிட்ட உள்ளூர் உற்பத்திகளை உலகெங்கும் சந்தைப்படுத்தும் திட்டத்திற்கமைவாக பின்வரும் பொருள்களை உரிய தரத்தில் உற்பத்தி செய்யக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

1. மோர் மிளகாய்
2. சாதாரண மிளகாய் (பொரிப்பதற்கு)
3. வடகம்
4. ஒடியல்
5. ஒடியல் மா
6. ஏனையவை

மேலும் எமது நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதி தேவைப்படுகின்றார். எனவே அனுபவமுள்ளவர்கள் தமது சுயவிபரக்கோவையுடன் புகைப்படம் ஒன்றையும் சேர்த்து 31.12.2009ற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி: வலம்புரி
விளம்பர இல. C-3885
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3885)



## க.பொ.த (உ/த) பரீட்சையினை மேற்கொண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களே உங்களிற்கு

இலங்கையில் 45 வருடகாலம் மக்களிற்கு காப்புறுதிச் சேவையினை மேற்கொண்டுவரும் பிரபல அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மாபெரும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி நெறியினை வழங்கவுள்ளது.

* 06 மாதகாலப் பயிற்சிநெறி.
* பயிற்சி நெறிமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
* பயிற்சி நெறியினை பூரணமாக்கும் மாணவர்களுக்கு , பல்கலைக்கழகப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்பு

எனப் பல நன்மைகளை வழங்கக் காத்திருக்கின்றது.

(விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

மேற்படிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையினை

**30.12.2009 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்ப முகவரி: விற்பனை முகாமையாளர் - ஆயுள்**

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

குறிப்பு :- க.பொ.உ.த.பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். உயர்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள். (C-3874)

# இன்று ஒரு தகவல்

## கடன்பட்டோர் நெஞ்சம்

ஒருத்தருக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டது. அதற்காக இன்னொருவரைத் தேடிப் போய்க் கடன் கேட்டார்.

அதற்கு அவர் "சாட்சியோடு வாங்க... கடன் கொடுக்கிறேன்" என்றார்.

"இறைவனுடைய சாட்சியே போதுமே" என்றார் இவர்.

"நான் கொடுக்கப் போகும் கடனுக்கு யாராவது பொறுப்பேற்க வேண்டாமா? அப்படி கடனுக்குப் பொறுப்பேற்கக் கூடிய யாராவது ஒருவரை அழைத்துக் கொண்டு வாங்க... கடன் கொடுக்கிறேன்" என்றார் அவர்.

"உங்கள் கடனுக்கு இறைவனையே பொறுப்பாளியாக்குகிறேன்" என்றார் இவர். அவர் நிமிர்ந்து பார்த்தார்.

சரி என்று ஒத்துக் கொண்டு குறிப்பிட்ட தவணைக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கடனைக் கொடுத்தார்.

கடன் வாங்கியவர் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார். அதன்பின் பிழைப்புத் தேடி கடல் கடந்து வேறு நாட்டுக்குப் போய்விட்டார். போன இடத்தில் நிறையச் சம்பாதித்தார். கடனைத் திருப்பித் தரவேண்டிய நாள் நெருங்கியது. எப்படியாவது குறிப்பிட்ட நாளுக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார். உடனடியாக பயணம் செய்வதற்கு இவருக்கு தோணி எதுவும் கிடைக்கவில்லை.

கடன்பட்ட நெஞ்சம் கலங்க ஆரம்பித்தது. ஏதாவது செய்தாக வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஒரு மூங்கில் குழாயை எடுத்து அதைத் துப்புரவாக்கி அதற்குள் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை வைத்தார். கூடவே தன்னுடைய நிலைமையையும் விளக்கி ஒரு கடிதமும் எழுதிவைத்தார். தண்ணீர் உட்புகாதவாறு அதைக் கெட்டியாக மூடி அடைத்தார். எடுத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தார்.

மனதுக்குள், "இறைவா உன்னுடைய அடியார் ஒருவரிடம் கடன் வாங்கினேன். அது உனக்குத் தெரியும். உன்னையே சாட்சியமாக்கினேன். அதுவும் உனக்குத் தெரியும்.

இதற்கு சம்பாதித்து அவர் எனக்குக் கடனும் கொடுத்தார். அதற்கான காலக்கெடுவும் நெருங்கி விட்டது. அவரிடம் போய்ச் சேர எந்த வழியும் கிடைக்கவில்லை. வேறு வழியில்லாமல் தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியாவது இதை அவரிடம் சேர்த்து விடு" என்று மனமுருகி வேண்டினார். மூங்கில் குழாயைக் கடலில் வீசினார். அதே நேரத்தில் இங்கே என்ன நடந்தது தெரியுமா? கடன் கொடுத்தவர் கடற்கரையில் வந்து காத்துக் கொண்டிருந்தார். காலக் கெடு முடியப்போகிறது. கடன் வாங்கியவரைக் காணவில்லையே என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் மூங்கில் குழாய் அவரது காலடியில் வந்து ஒதுங்கியது. எடுத்துப் பார்த்தார். பணமும் கடிதமும் கிடைத்தது. அவருக்கு ஆச்சரியம்! சிறிது நேரம் கழித்து கடன் வாங்கியவரும் வந்து சேர்ந்தார்.

"ஐயா... தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறேன். வேறு வழியே கிடைக்கவில்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இந்தாங்க உங்கள் பணம்" என்றார்.

"சகோதரரே ! அதற்கு அவசியமேயில்லை. எனக்கு வர வேண்டிய பணம் எப்பவோ வந்து சேர்ந்து விட்டது" என்றார் இவர். இப்படி ஒரு கதை உண்டு.

நபிகள் நாயகம் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்துவதற்காக தமது தோழர்களுக்கு அவர் சொன்ன கதை இது.

திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணத்துடன் மக்களின் பொருட்களைஒருவர் கடனாகப் பெறுகிறார் என்றால் இறைவன் அவன் சார்பில் அக்கடனை நிறைவேற்றித் தருகிறான். ஆனால் கடனைத் திருப்பித்தரும் எண்ணமே இல்லாமல் ஒருவன் பெறுவானாகில் அதன் காரணமாக அவனை இறைவன் அழித்தே விடுகிறான் என்கிறது நபிகள் நாயகத்தின் எச்சரிக்கை.

இதைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டியது அவசியம். ஒருத்தன் ஒரு பெரியவரிடம் சென்று "ஐயா என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றான்.


"இல்லையே" என்றார் அவர்.

"ஐந்து வருடத்துக்கு முன் உங்களிடம் வந்து என்னுடைய கஷ்டத்தைச் சொன்னேன். ஐந்நூறு ரூபாயைத் தூக்கி கொடுத்தீர்கள். அதை என்னால் மறக்கவே முடியாது" என்றான். "அதுக்கெல்லாம் நன்றியெல்லாம் வேண்டாம். கொடுத்த பணத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டாம்" என்றார் அவர்.

"நான் அதற்காக வரவில்லை. மறுபடியும் அதே மாதிரி ஒரு உதவி செய்தீர்களானால் நான் அதை வைத்து மேற்கொண்டு பிழைக்க வசதியாக இருக்கும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 'இசுறு' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி



கிராமப்புற பாடசாலைகளில் முன்னோடியாகத் திகழும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மஹிந்த சிந்தனையின் கிராமப் பாடசாலைக் கல்வி எழுச்சித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெறவுள்ளது.

இதற்கென முன்மொழியப்பட்டுள்ள முதலீடு ரூபா அறுபது மில்லியன்.

இதன் முக்கிய எதிர்பார்ப்புக்களாவன,

நல்ல இடவசதியுள்ள வகுப்பறைகள், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்பு, விஞ்ஞான ஆய்வு கூடம், இணையத்தள வசதிகளுடைய கணனி அறையும், வாசிகசாலையும், மேலதிக தொழில்கள் சம்பந்தமாக கற்றுக் கொள்ளும் வசதி வாய்ப்புக்கள், ஏனைய மொழிகளை கற்றுக் கொள்வதற்குரிய வகுப்பு வசதிகள், விளையாட்டு மற்றும் அழகியற் பாடங்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

இசுறு பாடசாலைத்திட்டத்தை குறுகிய காலத்தில் நிறைவேற்ற மாண்புமிகு ஜனாதிபதியால் விசேட நிபுணத்துவக் குழு நியமிக்கப்பட்டு கல்வி அமைச்சில் இயங்கி வருகின்றது.

இக்குழுவினர் முதற்தடவையாக இரு மாதங்களிற்கு முன்னர் ஸ்கந்தவேராதயக் கல்லூரியை பார்வையிட்டுள்ளனர். தொடர் பரிசோதனையின் பின் முதற் கட்டமாக கந்தையா உபாத்தியார் மண்டபம் அமைந்திருந்த இடத்தில் முகப்பொழிவுற மூன்று மாடிக் கட்டிடத்தை அமைக்க தீர்மானித்துள்ளார்கள்.

யாழ். வருகை தரும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இக்கட்டத்திற்கான அடிக்கல்லை இன்று புதன்கிழமை நாட்டவுள்ளார்.

இது ஒற்றுமைக்கும், கிராம பாடசாலைகளின் முன்னேற்றத்திற்குமான அறிகுறி. இக்கட்டடம் 90' × 25' விஸ்தீரணமுடையதாகவிருக்கும். இதற்கான வரைபடங்கள் பாடசாலை அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கட்டடம் 3 மாடிகளாகக் ,கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இக்கல்லூரி தேசிய மட்டத்தில் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக 'ஒறேற்றர்' சுப்பிரமணியத்தின் காலத்தில் வளர்ச்சி பெற்று இருக்கிறது.

இக்காலம் ஸ்கந்தாவின் பொற்காலமென எல்லோராலும் புகழப்பட்டது.

இதன் பின் பல காரணிகளால் சில காலம் நலிவுற்றிருந்த இக்கல்லூரி மீண்டும் அதிபர் ஆறு திருமுருகனின் முயற்சியாலும், அவருக்கு ஒத்தாசை வழங்கி வரும் ஆசிரியர் குழாமின் செயற்பாடுகளாலும் முன்னேற்றமடைந்து ஒளிர் வீசுகின்றது.

இசுறு திட்டத்தின் கீழ் நடைபெற இருக்கும் புனரமைப்பும், எதிர்பார்ப்புகளும் 'ஸ்கந்தாவின்' பொற்காலம் தழைத்தோங்கச் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கத் தலைவர் சு. பரமநாதன் தெரிவித்துள்ளார். ஓ




*கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் குருளைச் சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வில் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் மு. ரவீந்திரன், குருளைச் சாரணர் தலைவி திருமதி சி. விஜயகுமார், வித்தியாலய முதல்வர் கி. கிருஷ்ணாகரன், சாரணிய பொறுப்பாசிரியர்களான திருமதி இ. காசிவிசுவநாதன், திருமதி. சி. சுவீந்திரன் மற்றும் சாரணிய சிறுவர் சிறுமியரையும் படத்தில் காணலாம்.*

# இராசி பலன்

09-12-2009

(கார்த்திகை 23 புதன்கிழமை)

அட்டமிமுன்னிரவு 9.19 மணிவரை

பூரம் பிற்பகல் 4.29 மணிவரை

இராகுகாலம் 12.18- 1.48 மணிவரை

சுபநேரம் 4.48 - 6.18 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, வேலைச் சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், பணக்குறைவு. |
| இடபம் | புதிய தகவல், பிரயாணம், உடல் நலக்குறைவு, சுபசெலவு. |
| மிதுனம் | கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| கடகம் | விவாதம், வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், ரோக நிலை. |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை, சிந்தனை மிகுதி, தொழில் ஆர்வம். |
| கன்னி | வீண் அலைச்சல், சுபசெலவு, தொழில் நன்மை, மனஸ்தாபம். |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, விருந்துபசாரம், உறவினர் வருகை. |
| விருச்சிகம் | கடின முயற்சி, பிறர் உதவி, பாராட்டு, பொருள் சேர்க்கை. |
| தனுசு | ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு, பிரயாணம், எதிர்பாராத செலவு. |
| மகரம் | பிறருக்கு உதவுதல், வாகன பயம், முயற்சி தாமதம், செய் தொழில் நன்மை. |
| கும்பம் | நிலைமாற்றம், காரிய அனுகூலம், தனவருவாய், தன்னம்பிக்கை. |
| மீனம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, தேகநலன். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 120 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 150 | 60 | 140 |
| பாகற்காய் | 80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 20 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | -- |
| கறிமிளகாய் | 100 | 120 | -- |
| முருங்கைக்காய் | 100 | 120 | 200 |
| போஞ்சி | 80 | 100 | 140 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |



யாழ். மாநகர சபை உறுப்பினர் முருகையா கோமகனால் நடத்தப்பட்ட க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் இருநாள் கருத்தரங்கில் முருகையா கோமகன் நிகழ்வை ஆரம்பித்து உரை நிகழ்த்துவதையும், அருகில் அதிபர் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் ஆசியுரை வழங்குவதையும் ஆசிரியர் த. தயாபரன் கருத்தரங்கினை நிகழ்த்துவதையும் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் மு.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக லயன்.வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, சிறப்புவிருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக் கராஜா, யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். 2006, 2007, 2008 பரிசுக்குரிய மாணவர்கள் இன்று புதன்கிழமை பாடசாலைக்கு சமூகமளிக்கும் படி அதிபர் கேட்டுக் கொள்கிறார். (ஓ-2-17)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் இன்று புதன்கிழமை நல்லூர் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஜனசக்தி சனசமூக நிலையத்திலும், நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை அரசடி வீதி 5 ஆம் ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து அரியாலை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் முன்பள்ளியிலும் நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரையும் ஈச்ச மோட்டை விதானையார் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் கொழும்புத்துறை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஏ.வி. வீதி மிருக வைத்திய நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுள்ளார். (ஓ-9)

## வாண்மை விருத்தி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பேச்சு சிங்கள மொழி விருத்தி செய்யும் செயலமர்வு எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நான்கு தினங்களில் தொடர்ந்து யாழ் ஆசிரிய வளநிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (ஓ-7)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வட்டு. இந்து வாலிபர் அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வலி மேற்குப் பிரதேசத்தில் 513 படையணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இப் போட்டியில் சங்கானை வை. எம்.எச். ஏ. அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் அணிகளை வெற்றி பெற்று வட்டு இந்து வாலிபர் சங்க அணி சம்பியனாகியது.

இப்போட்டிகள் வட்டு மத்திய கல்லூரி கரப்பந்தாட்ட திடலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியாயமான கொடுப்பனவு கிடைக்க நடவடிக்கை

### ஆளுநர் சந்திரசிறி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு கைதடி- நாவற்குழி பிரதேசங்களுக்குட்பட்ட குடும்ப முன்பள்ளிகளின் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கலை விழாவில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய விசேட விருந்தினர் ஆளுநர் சந்திரசிறி முன்பள்ளிகளின் தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாக நாம் கூடிய கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்ததுடன் உடனடியாக முன்பள்ளி ஆசிரியைகள் அனைவருக்கும் துவிச்சக்கர வண்டிகளும், முன்பள்ளி குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்களும் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்ததுடன் அடுத்த வருட ஆரம்பத்தில் மாகாண கல்வி சேவைகள் திட்டத்தின் கீழ் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நியாயமான ஓர் கொடுப்பனவு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அங்கு திரண்டிருந்தோரின் பலத்த கரகோசத்திற்கு மத்தியில் தெரிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தா முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் குழந்தைகளுக்கும் இந் நன்னாள் ஒரு பொன்நாள் எனத் தெரிவித்ததுடன் கொடிய யுத்தம் முடிபடைந்த நிலையில் வளமானதோர் எதிர்காலத்தை நோக்கி நாம் நமது பயணத்தை தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் முன்பள்ளிகளினதும் இப்பிரதேசத்தினதும் அபிவிருத்தியில் தாமும் ஆளுநரும் கூடிய கவனமெடுத்திருப்பதாகவும் எனவே சகல கோரிக்கைகளையும் எவ்வித தயக்கமுமில்லாமல் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (ஓ)

## சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய பாராட்டுவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தரபுர ஸ்கந்தவ ரோதயா மகாவித்தியாலத்தின் புதிய மணி கோபுர கும்பாவிஷேகம், புதிய மணி ஒலிப்பு, வாணி விழா போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வு, புதிய புத்தகங்கள் வழங்கள், வருடாந்த மாணவ தேர்ச்சி அறிக்கை வழங்கும் நிகழ்வுகள் என்பன இன்று புதன் கிழமை காலை 7.30 மணிக்கு வித்தியாலய அதிபர் புலவர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சார ணர் குழுத்தலைவரும் இலங்கை முதலுத விச் சங்க ஆணையாளருமான ரி.என் போஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் செல்வி சந்திர ராஜினி கணபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார் தெடர்ந்து மணி ஒலிப்பு , புத்தகம் வழங் கல் நிகழ்வுகள் ,கௌரவிப்பு , பாராட்டுரை , தேர்ச்சி அறிக்கைகள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து இந்நிகழ்வில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா மகா வித்தியாலய இளைப் பாறிய அதிபரும், எழுத்தாளரும் கணித கல்வி மேதாவியும் சோதிட வித்தகருமான ம. கெங்காதரம், சைவப்புலவர் வ. அ. தங்கமயில் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் பாராட்டுரையை இளைப்பாறிய அதிபரும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவருமான மு.திருஞானசம்பந்த பிள்ளை வழங்கவுள்ளார். (ஓ-4-9)

## இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மீள் எழுச்சித் திட்டக் கிராமங்களில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கைதடி- நாவற்குழி, கைதடி வடக்கு, மீசாலை, கோயில் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் எழுச்சித் திட்டக் கிராமங்களில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், கணணி வன்பொருள், மேசன், தச்சு வேலை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றவுள்ள இளைஞர் யுவதிகள் தத்தமது பகுதி கிராம அபிவிருந்தி அமைப்பு அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## ஆண்டிறுதி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

டபிள்யூ. எச். சி. நிறுவனத்தின் ஆண்டிறுதி நிகழ்வுகளில் சிறுவர்கள் கையெழுத்துப் புத்தகம் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு O.L.R. தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி. ஏ. மோகன்றாஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி கோப்பாய் பங்குத்தந்தை வணபிதா எவ். எல். என்.குறூஸ் (OMI) கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக ZOA நிறுவன திட்டமிடல் அலுவலர் வை. சிவயோகராஜன், கோப்பாய் பிரதேச செயலக சிறுவர்கள் நன்னடத்தை அலுவலக திருமதி எஸ். வரதீஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-9)




## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்குத் தொடரின் 38 ஆவது கருத்தரங்கில் "More Beyond the Riverfor Jaffna" எனும் கருப்பொருளில் தற்போது தாய்லாந்திலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வு உத்தியோகத்தராக பணியாற்றும் பொறியியலாளர் டுலீப் குணவர்த்தன கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கு இன்று புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 5 மணிவரை நல்லூர் விவசாய திணைக்கள ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து பங்குபற்றுவோருடனான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

73

அந்தப் பாடல்கள் தவிர, பட்டினத்துப் பிள்ளையார் திரட்டு என்ற புத்தகம் ஒன்று உள்ளது. இந்த நூலில் உள்ள பாடல்களே மக்களிடம் பரவியுள்ளன. இவற்றைப் பாடியவர் அதே ஊரில் பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த வேறொருவர். அவருடைய பாடல்கள் எளிமையானவை: பேச்சு வழக்குச் சொற்கள் பல கொண்டவை: உணர்ச்சி மிகுந்தவை. அவர் கடுமையான துறவறம் மேற்கொண்ட துறவி; இல்வாழ்க்கையைப் பழித்தும் உலக வாழ்வை வெறுத்தும் பாடிய பாடல்கள் பல இந்த நூலில் உள்ளன. பெற்ற தாயிடம் பேரன்பு கொண்டவர் என்பது, தாய் இறந்தபோது அவர் நெஞ்சம் நெகிழ்ந்து, உருகிப் பாடிய பாடல்களால் தெரிகிறது. அந்தப் பாடல்களை இன்றும் பலர் பாடி உருகுகிறார்கள். அவரைப் பற்றி வழங்கும் கதைகள் அவருடைய கடுமையான துறவறம் பற்றி விளக்குகின்றன. பாடல்களும் அதை மெய்ப்பிக்கின்றன.

பட்டினத்தாரின் மாணவராக இருந்து உயர்நிலை பெற்றவர் பத்திரகிரியார். துளுவ நாட்டு மன்னராக இருந்து பிறகு பட்டினத்தாரிடம் வந்து துறவியானார் என்று சொல்லுவர். அவர்பாடல்கள், *பத்திரகிரியாா புலம்பல்*, என்ற தொகுப்பாக உள்ளன. தத்துவக் கருத்துகள் நிரம்பிய பாடல்கள் அவை. இரண்டு அடி உள்ள பாடல்களில் தம் உணர்வுகளையும் ஏக்கங்களையும் உருக்க மாக எடுத்துக் கூறியுள்ளார்.

பாரதம்

வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தமிழில் நாலாயிரத்து முந்நூறு விருத்தப்பாவால் இயற்றியவர். அவருடைய பாரதம் இலக்கிய உலகில் இடம்பெற்று வாழ்கிறது. பாடல்கள் நல்ல ஓட்டம் உள்ள நடையில் அமைந்தவை. போர்கள் நிகழ்ச்சிகளைப் பாடும் இடத்தில் நடை மிக மிடுக்காகச் செல்கிறது; போரின் வேகத்தை நடையே புலப்படுத்துவதாக உள்ளது. அவ்வாறே வியப்பு அவலம் முதலான சுவை மிகுந்த நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் இடங்களிலும், அந்தந்த உணர்ச்சிக்கு ஏற்றவாறு நடையின் இயக்கம் உள்ளது. பாரதக் கதையில் உள்ள சுவையான பகுதிகளை எல்லாம் விடாமல் கூடியவரையில் சுருக்கித் திறம்படத் தமிழில் தந்த புலவர் அவர். இசை நயம் உடைய சந்தப் பாடல்களைப்பாடுவதில் வல்லவர் அவர். அத்தகைய பாடல்கள்ள இயற்றுவதற்கு உரியவாறு தமிழோடு வடசொற்களை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்.

அருணகிரியார்

வில்லிபுத்தூரார்போல் தமிழ்ச் செய்யுள்களில் மிகுதியான வடசொற்களைக் கலந்த மற்றொரு தமிழ்ப் புலவர் அருணகிரிநாதர் என்பவர். சந்தப் பாடல்களைப்பாடுவதில் இணையற்று விளங்கியவர் அவர். அவர்பாடியுள்ள மூவாயிரம் பாடல்களும் திருப்புகழ் என்ற நூலாக உள்ளன. எல்லாம் முருகக் கடவுள் மேல் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் ஆகும். வெவ்வேறு வகையான சந்தங்களும் இசையமைப்புகளும் உடைய அவை, இசையுலகில் லயம் தாளவகைகள் நிறைந்த களஞ்சியமாகப் போற்றப் படுகின்றன. அத்தனை வகையான வேறுபாடுகள் நிறைந்த இசைப்பாடல்கள் வேறு எங்கும் இல்லை என்று இசையறிஞர்கள்போற்றிக்கூறுகிறார்கள். இன்றும், தமிழ் இசையரங்குகளில் திருப்புகழ்ப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. தேவார காலத்திற் குப் பிறகு பாடப்பட்ட பக்திப் பூடல்களுள் மிக்க புகழ்பெற்று விளங்கி வருபவை திருப்புகழ்ப் பாடல்களே ஆகும். பெரும் பாலான பாடல்களில், முன்பகுதியில் வேசையர்களின் சிற்றின்பக் கவர்ச்சியை வெறுக்கும் - வெறுப்பும், பின்பகுதியில் முருகனுடைய அற்புதத் திருவிளையாடல் பற்றிய புராணக் கதைகளும் அந்தந்தத் தகவல்களின் பெருமைகளும் எடுத்துரைக் கப்படுகின்றன. அவர் இயற்றிய கந்தர் அலங் காரம், கந்தர் அனுபூதி என்பவை பக்திச்சுவை நிரம்பியவை. கந்தரந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவகுப்பு என்பவை அவருடைய மற்ற நூல்கள்.

நளவெண்பா

வடமொழியில் பாரதத்தில் உள்ள நளன் என்னும் அரசனுடைய கதையைத் தமிழில் அழகாக வெண்பாவால் இயற்றியவர் புகழேந்தி (16ஆம் நூற்றாண்டு). அவர் ஒட்டக்கூத்தரின் காலத்தில் இருந்தவர் என்றும் பாண்டி நாட்டு இளவரசியைச் சோழன் மணந்துகொண்டபோது மணமகனின் சீதனப் பொருள்களோடு சேர்ந்து சோழநாட்டு அரண்மனைக்கு வந்தவர் என்றும். வந்த இடத்தில் அவர்க்குத் தீங்கான பல செயல்களை ஒட்டக்கூத்தர் செய்தார் என்றும், சிறையில் இடுமாறு செய்தார் என்றும், புகழேந்தியிடம் சிறைக் கைதிகள் சிலர் தமிழ் கற்றுக் கவிஞர்கள் ஆனார்கள் என்றும் அந்தக் கவிஞர்களின் திறமையை உணர்ந்து உண்மையைத் தெளிந்த பிறகே அரசன் புகழேந்தியைச் சிறையிலிருந்து விடுவித்தான் என்றும் கதைகள் சொல்லும். அந்தக் கதைகளில் சில பாடல்களில் பிற்காலத்தாரால் புனைந்து சேர்க்கப்பட்டுள்ளன. அவைகளும் சுவையான பாடல்களே. நளவெண்பாவில் உள்ள வெண்பாக்கள் 424. அந்தப் பாடல்கள் எல்லாம் இனிய ஓட்டம் உள்ள நடையில் அமைந்தவை. தட்டுத்தடையில்லாமல் சொற்கள் ஓடி வந்து புலவர்க்கு ஏவல் செய்வன போல் பாடல்கள் இயல்பாக அமைந்துள்ளன. எளிய நடையிலும் உள்ளன.

ஆகையால் பிற்காலத் தில்,வெண் பாவில் புகழேந்தி, என்ற பாராட்டு அவருக்குக் கிடைத்தது. தமயந்தி சுயம்வர மண்டபத்திற் குள் வரும் காட்சியைக் கூறும் இடத்தில், மன்னர்களின் கண்களாகிய தாமரை மலர்கள் பூத்த சுயம்வர மண்டபத்தில் வெள்ளைச் சிறகுகளை உடைய அன்னப் பறவை செந்தாமரைப் பொய்கையில் செல்வதைப் போல வந்தாள் என்கிறார். நாட்டை இழந்து தமயந்தியுடன் காட்டை அடைந்த நளன், நள்ளிரவில் அவள் உறங்கிக் கொண்டிருந்தபோது இருவரும் அணிந்திருந்த ஒற்றையாடை யைக் கத்தியால் அரிவதைக் கூறும் புலவர், அந்த ஒற்றையாடையை மட்டும் அல்லாமல், ஓருயிராக இருந்த நிலையையும் அரிவதாகவும் தன் அன்பை முற்றும் முதலோடும் அரிவதாகவும் எடுத்துரைக்கின்றார். தம்மைப் போற்றிய சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனை நளவெண்பாவில் ஐந்து இடங்களில் நன்றியுணர்வோடு புகழ்ந்துள்ளார். பூஞ்சோலையில் பெண்கள் மலர் பறிக்கும் காட்சியை புகழேந்தி வருணிக்கின்றார். (தொடரும்)

பேராசிரியர் மு.வரதராசன்

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது

### தேசிய நல்லிணக்க அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஐக்கியம் மற்றும் சமூக ஒன்றிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமானால் தேசிய மொழிக்கொள்கை சரி வர அமுல் படுத்தப்படல் வேண்டும் என்று அரசியல் விவகாரம் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது ,

சமூகங்களுக்கிடையேயான புரிந்துணர்வுக்கு மொழி பிரதான ஊடகமாகவுள்ளது. தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியையும் சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியையும் நன்கு கற்றுக் கொள்வார்களாயின் அரச பணிகளை திறன் மிக்கதாக சகல சமூகங்களைச் சேர்ந்தோருக்கும் மேற்கொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. தேசிய மொழிக் கொள்கை சரிவர நடைமுறைப்படுத்தப் படும் போது இந்நாட்டில் நிரந்தர சமாதா னத்தையும் சமூகங்களிடையே புரிந்துணர்வையும் கட்டியெழுப்ப முடியும்.இவற்றை ஏற்படுத்தும் பொருட்டு இரண்டாம் மொழிக் கல்வி தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இதன் நிமித்தம் அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழிக்கான பயிற்சிகளையும் அரச கரும மொழித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

பரீட்சைகளில் சித்தியடையும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றார்.

(ஓ-2-4)


விவாத அரங்கு 3

மாணவர்களின் கல்வி முன்னேற

யாழ். குடாநாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்

இணைக்க வேண்டும் | இணைக்கக் கூடாது

உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி :– 11.12.2009

குறிப்பு: ஒரு தடவை விவாத அரங்கில் கலந்து கொண்டவர்கள் இன்னொரு விவாத அரங்கில் பங்கேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.


### ஜனாதிபதி பதவி சுக போகத்திற்காக அல்ல

# மக்கள் சேவைகளில் நான் என்றும் உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்துவேன்

(கொழும்பு)

உயிர்த் தியாகங்களைச் செய்து பயங்கரவாதத்திடம் இருந்து மீட்டெடுக்கப்பட்ட இந்நாட்டின் தற்போதைய நிலைமைகளையும் இடம்பெயர்ந்த நிலையில் அல்லல் படுகின்ற பாடுகின்ற அப்பாவி தமிழ் மக்களின் வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கையில் அது மிகவும் கவலையளிக்கிறது என்று எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் ஜென ரல் சரத்பொன்சேகா தெரிவித்தார். நிறை வேற்று அதிகாரத்தை இல்லாதொழித்ததன் பின்னரும் எனக்கென்று பொறுப்புக்கள் இருக்கின்றன.

அதனை செவ்வனே நிறை வேற்றுவேன் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதிப் பதவியில் அமர்வது சுக போகங்களை அனுபவிப்பதற்காக அல்ல. 30 வருட காலம் நாட்டில் நிலவிய பயங்க ரவாதம் ஒழிக்கப்பட்ட இந்நாட்டின் ஜனநாய கத்தை உறுதிப்படுத்தி அதனை மக்களிடம் ஒப்படைப்பதே எனது பணியாகும் என்று அவர் கூறினார்.

ஜே.வி.பி. கட்சிப் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் நலனுக்காக சகல நடவடிக்கைகயும் மேற்கொள்கின்ற கட்சியாக நான் ஜே.வி.பியை காண்கின்றேன். அந்த வகையில் எனது இராணுவ சேவை இன்னும் ஒன்றரை வருடத்திற்கு நீடித்திருக்கக் கூடியதாக இருந்தாலும் சீருடையை கழற்றி வைத்துவிட்டு மக்களுக்கு சேவை செய்ய அரசியல் பாதையை தேர்ந்தெடுத்தமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. எந்தவொரு இராணுவத் தளபதியும் தான் ஓய்வு பெற்றதன் பின்னர் அவருக்கு வழங்கப் படுகின்ற உடமைகளை அரசாங்கம் இலஞ் சமாகவே கருதுகின்றது. எனக்கு அமைச் சின் செயலாளர் பதவியும் அமைச்சுப்பதவிகளும் தேடிவந்தன. ஆனால் அவற்றை நான் ஏற்கவில்லை.

பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டதன் பின்னரும் நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று எண்ணிய போதிலும் அது நடைபெற வில்லை. ஆனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அவர்கள் மீது சுமத்தப் படுகின்ற சுமைகள் ஆகியவை மாத்திரம் அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு நல்லாட்சி ஒன்றை மலரச்செய் வதற்கும் அதேபோல் அரச சேவை , பொலிஸ் சேவை உள்ளிட்ட மக்கள் சேவைகளில் உண்மையான ஜனநாயகம் கட்டியெழுப்பப்படுவதற்கும் ஊழல் மோசடிகள் மற்றும் இலஞ்சம் ஆகியவற்றை இல்லாது செய்வதற்கும் சகல நடவடிக்கை ளையும் மேற்கொள்வேன் என்றும் மக்களுக்குப் பதிலளிக்கக்கூடிய பாராளுமன்றத்தை நிறுவி , அதன் ஊடாக நல்லாட்சியை ஏற்படுத்துவதே எனது நோக்கமாகும் என்றும்

மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-2-6)





நவாலி சென்பீற்றர் றோ.க.த.க பாடசாலையின் தரம் 5 மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் ஒருவனுக்கு வகுப்பாசிரியர் பரிசில் வழங்குவதையும், அருகில் அதிபர் எட்வேட் பல்சிராச் அமர்ந்திருப்பதையும் இப்பாடசாலையில் தரம் 5 மாணவர்களினால் தமது சுற்றாடல் செயற்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட சிறுபைகளினை ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலை அதிகாரிகளிடம் கையளிப்பதையும் அருகில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# பாதுகாப்பு வாகனம் தரப்படவில்லை; எனது உயிருக்கு நீங்களே பொறுப்பு

## பொலிஸ்மா அதிபருக்கு மனோ கணேசன் மடல்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி நிலைப்பாடு கடந்தவாரம் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து மனோ கணேசன் எம்.பி.யின் பொலிஸ் பாதுகாப்பு ஜீப் வாகனம் பழுது பார்க்கப்பட வேண்டும் என்ற காரணம் காட்டப்பட்டு பொலிஸ் வாகனம் திருத்தும் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது.

இந்நடவடிக்கை நீதிமன்ற உத்தரவை மீறி நடத்தப்படும் அரசியல் பழிவாங்கல் என ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இவ் விவகாரம் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவிற்கு அனுப்பி வைத்துள்ள அவசர மடலில், உங்கள் திணைக்களம் கடந்த வாரம் எனது பாதுகாப்பு வாகனத்தைப் பழுது பார்க்க வேண்டும் எனக் கூறி அதைக் கொண்டு சென்றது. பின்தொடர் வாகனம் இல்லாத காரணத்தினால் எனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கடமைகளைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான் எனது கடமைகளுக்காகப் பயணம் செய்யும் போது அவர்கள் எனது வாகனத்திற்குப் பின்னாலே ஓடி வரமுடியாது. அவர்கள் தமது வாகனத்திலே தான் ஆயுதங்களுடன் பின் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அவர்களது பயணத்திற்காகப் பயன்படுத்துவதற்கு தனிப்பட்ட முறையில் என்னிடம் மேலதிக வாகனம் கிடையாது. அரசாங்கத்திடம் பணம் வாங்கி சொந்தப் பாதுகாப்பிற்காக. சொந்தமாக வாகனம் வாங்கும் நிலையிலும் நானில்லை.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், முழுமையான பாதுகாப்பை நீங்கள் வழங்கத் தவறிய காரணத்தினாலே எதிர்வரும் நாட்களில் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு மரணம் அல்லது காயம் சம்பவித்தால் அவற்றுக்கு பொலிஸ்மா அதிபர் என்ற முறையில் நீங்களே இந்நாட்டு மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்குப் பதில் கூறியாக வேண்டும் என பகிரங்கமாகத் தெரிவிக்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-2-4)

# இலங்கை வரலாற்றில் உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பவர் தற்போதைய ஜனாதிபதியே

## பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது 64 தொழிற்சங்கங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக தற்போதைய ஜனாதிபதியை ஓரங்கட்டிவிட முடியாது என்று தொழிற்சங்கங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் இணைப்பாளர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர தெரிவித்தார்.

இணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு கடந்த திங்கட்கிழமை மகாவலி நிலையத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை பாதுகாப்பதில் இலங்கை வரலாற்றில் தற்போதைய ஜனாதிபதி போல் ஒருவர் இருக்கவில்லை. இலங்கை மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வந்த நிலையை மாற்றியமைத்து இலங்கைக்கு பாரிய சவாலாக இருந்த உள்நாட்டு யுத்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிபுக்குக் கொண்டு வந்துள்ளார்.

தற்போது இலங்கையில் அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. எனவே நாட்டை கட்டியெழுப்பும் போராட்டத்திற்காக அவரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றியடைய செய்ய வேண்டும்.

எதிரணியின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவின் நாட்டுக்கான எதிர்கால அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக தெளிவான விளக்கம் இல்லை அத்தோடு ஐ.தே.க வின் பொருளாதாரக் கொள்கையினை எதிர்காலத்தில் இலங்கை பின்பற்றுமாயின் அது நாட்டுக்கு உகந்ததல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### திராட்சை

Botanical Name- Vitis vinifera
Family - Vitaceae
Engl - Grape
Sinh - Muddrapalam

பெரிய ஏறுகொடித் தாவரமாகும். கெட்டியாக பற்றிப் பிடிப்பதற்குரிய தந்திகம்பிகள் (Tendrils) நீண்டவை. இலைகள் 7.5 - 15 செ.மீ நீளமானவை. வட்ட வடிவானவை. 5 சோணைகளைக் கொண்டவை. இவற்றின் விளிம்புகள் சமச்சீரற்று பற்களைக் கொண்டவை.

இலைக்காம்பு 3.8 - 7.5 செ.மீ நீளமானவை. இலைகள் எதிரொழுங்கானவை. பூக்கள் பச்சை நிறமானவை. 5 இதழ்கள் கொண்டவை. பழங்கள் வெவ்வேறு அளவுகளில் காணப்படும்.

நீலமும், கறுப்பும் கலந்தவை அல்லது பச்சை நிறமானவை. வித்துக்கள் 2-4 பேரிக்காய் வடிவானவை. பொதுவாக திராட்சைக் கொடியாக பந்தலில் வளர்க்கலாம். இவ் திராட்சை வகைகளுள் நீலம், பச்சை திராட்சை, அனாப் இஷாகி, பன்னீர் திராட்சை வகைகள் மிகவும் முக்கியமானவை.

### இனவிருத்தியும் பரம்பலும்

திராட்சை ருஷ்யாவை தாயகமாகக் கொண்டது. திராட்சை மிதவெப்பமண்டலப் பயிராகும். விதை உள்ள திராட்சை, விதை இல்லாத திராட்சை என இருவகைப் பழங்கள் உள்ளன. வேர்விட்ட கிடைத்துண்டுகள் இனப் பெருக்கத்திற்கு பயனாகின்றன. வடிகால் வசதியுள்ள நிலமும் கார அமில நிலை 6.5 - 7.0 உள்ள நிலமும் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது.

### மருத்துவப் பயன்கள்

◆ திராட்சைப் பழங்களை நன்கு கழுவிய பின்பு அவற்றிலிருந்து சாறு பிழிந்து சீனி கலந்து காய்ச்சி சேமிப்பு இரசாயனப் பொருட்களை கலந்து சேமித்து வைத்துக் கொண்டு அவ்வப்போது அருந்தலாம்.

இதனால் தாகம் தணியும், உடலிற்கு ஊட்டத்தைக் கொடுக்கும். உடல் குளிர்ச்சியடையும். இரத்தம் நன்கு சுத்தியடையும். குடற் புண்களும் தணியும்.

◆ உலர்ந்த திராட்சை பழங்களை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து உண்பதில் ஊட்டச்சத்து மிகுந்ததாகவும், மலத்தை இளக்கும் தன்மை கொண்டதாகவும் இருக்கும். உடல் சூடு குறையும்.

◆ தண்ணீர் விட்டு சுத்தம் செய்த பழங்களிலிருந்து தயாரித்த திராட்சை சாற்றுடன் சீனி கலந்து தர கர்ப்பிணிப் பெண்களுக்கு உண்டாகும் வாந்தி, வாய்க்குமட்டல், வாய் கசப்பு ஆகியவை குணமாகும்.

◆ தண்ணீரில் கழுவிய உலர்ந்த திராட்சைப் பழங்களை இளஞ்சூட்டுடன் உள்ள நீரில் ஓர் இரவு ஊறவைத்து காலை அத் தண்ணீரிலேயே அதைப் பிழிந்து வடிகட்டி குழந்தைகட்கு கொடுக்க பலம் உண்டாகும். மலச்சிக்கல் நீங்கும். வாந்தி தீரும்.

◆ திராட்சை விதைகளை உலர்த்தி நன்கு பொடித்து வெண்ணெயுடன் கலந்து காலையும் மாலையும் உண்டுவர வயிற்றுப் போக்கு குணமாகும்.

◆ திராட்சை இலையை ஆறு மிளகு, சிறிது சீரகம் ஆகியவற்றுடன் குடிநீர் காய்ச்சி 30 மில்லி அருந்த அஜீரணத்தால் வரும் பேதி குணமாகும்.

◆ இரத்த அழுத்தம் உடையவர்கள் கூட இப்பழச்சாற்றை தினம் ஒரு வேளை சாப்பிடுவது நல்லது. கல்லீரல், மண்ணீரல் ஆகிய ஜீரண உறுப்புக்களுக்கு திராட்சை வலிமை தருவதுடன் அவை நோய்வாய்ப்பட்டால் இலகுவில் நல்ல நிலை மையை அடையச் செய்யும்.

◆ 20 கிராம் உலர்ந்த திராட்சையை நெய்யில் பொரித்து சாப்பிட வறட்டு இருமல் நீங்கும்.


◆ திராட்சை பழத்தை பன்னீரில் ஊறவைத்து அதன் சாற்றை பருகிவர இதயம் வலிமை பெறும்.

◆ பன்னீரில் திராட்சையை ஊறவைத்து பின்பு பிழிந்து அதேயளவு பசுப்பால் கலந்து இரவில் அருந்த உடற்தாதுக்கள் பலம்பெறுவதால் உடல் பலம் பெறும்.

◆ சீமை அத்திப்பழம் இரண்டு, உலர்ந்த திராட்சைப்பழம் 10 கிராம் இரண்டையும் பாலில் கலந்து காய்ச்சி தினம் காலையில் சாப்பிட்டுவர கண்களுக்கும் மூளைக்கும் நல்ல வலிமையைக் கொடுக்கும்.

◆ 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு வரும் மாதவிடாய் தொல்லை தீர திராட்சை ரசம் தினம் 90 மில்லி அருந்திவர குணமாகும்.

◆ பித்த, சூட்டு ஆதிக்கம் உடைய உடம்பினர் இப்பழத்தை தினம் சாப்பிட்டுவர கை, கால் எரிச்சல், தலைச்சுற்றல் ஆகியன நீங்கும். நமது அன்றாட உணவுப்பழக்கத்தில் திராட்சையை பழக்கிக் கொண்டால் நோய் வராது தடுக்கலாம். வந்த நோயையும் போக்கலாம்.



**100 கிராம் பழத்தில் அடங்கியுள்ள சத்துக்கள்**

| | நீலப்பழம் | இளம் பச்சை பழங்கள் | உலர்ந்த திராட்சை பழங்கள் |
|---|---|---|---|
| புரதம் (கி) | 0.6 | 0.5 | 1.8 |
| கொழுப்பு பொருள் (கி | 0.4 | 0.3 | 0.3 |
| நார்ப்பொருள் (கி) | 2.8 | 2.9 | 1.1 |
| காபோவைதரேற்று (கி) | 13.1 | 16.5 | 74.6 |
| கல்சியம் (மி.கி) | 20 | 20 | 87 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 23 | 30 | 80 |
| இரும்பு (மி.கி) | 0.5 | 0.5 | 7.7 |
| தயமின் (மி.கி) | 0.04 | 0 | 0.07 |
| றைபோபிளேபின் (மி.கி) | 0.03 | 0 | 0.19 |
| நியோசின் (மி.கி) | 0.2 | 0 | 0.7 |
| உயிர்ச்சத்து C (மி.கி) | 1.0 | 0 | 1.0 |
| கரோட்டின் (மைக்ரோகிராம்) | 3.0 | 0 | 2.4 |

### திராட்சைப்பழ சர்பத்

திராட்சைப்பழம் - 1 கிலோ, சீனி அல்லது தேன் - 300 கிராம், எலுமிச்சம்பழம் - 2, ஏலக்காய் - 4, இஞ்சி (தோல் சீவியது) - 1 சிறிய துண்டு.

திராட்சைப்பழத்தை சாறு பிழிந்து வடிகட்டிக் கொண்டு, எலுமிச்சம் பழச்சாறு, சீனி, இஞ்சிச்சாறு, ஏலக்காய்த்தூள் ஆகியவற்றை கலந்து கொள்ள வேண்டும். சீனி நன்றாக கரைந்தபின்பு சர்பத்தாக பயன்படுத்தலாம்.

உடல்பலம் பெறுவதுடன் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நத்தார் இன்னிசை ஆராதனை நிகழ்வுகள் வட்டு தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் நடைபெற்றது. மேற் படி நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் இறை கீதங்கள் இசைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : கிருஸ்ணா)

# நிலச்சரிவு ஏற்படுவதற்கான காரணங்களும் அதனைத் தடுப்பதற்கான வழி வகைகளும்

இயற்கையாக ஏற்படும் நிலச்சரிவுகள் மனித தவறால் ஏற்படும் நிலச்சரிவுகள் என இரண்டு வகைகள் உள்ளன.மரங்களை வெட்டுதல், மலைகளில் உள்ள மரங்களை வெட்டிச் சாய்த்தால், அவற்றின் வேர் இருந்த பகுதி மண் நெகிழ்ந்து போகும். கண மழை பெய்யும் போது இந்த மண் தானாகவே உதிரத் தொடங்கி புவி ஈர்ப்பு விசை காரணமாக கீழே இறங்கத்துவங்கும். அதுவரை மண் தாங்கி நின்ற பாறைகளும் உருண்டு கீழே விழத்தொடங்கி விடும்.

### இயற்கை நீர் பாதைகளை அடைத்தல்

மழைக்காலங்களில் மழையில் இருந்து நீர் கீழே வடிய இயற்கையான பாதைகளான ஆறுகள் , ஓடைகள், சிற்றோடைகள், அருவிகள் ஆகியவற்றை சுய நலத்திற்காக மனிதர்கள் பதம் பார்க்கும் போது வழி மாறிப் போகும். நீர் ஆங்காங்கே தங்கி நிலத்தை நெகிழ்வடையச் செய்து விடுகிறது. இந்த நிலங்களே சரிவுக்குக் காரணமாகி விடுகின்றனர்.

### கழிவு நீர் அடைபட்டுப்போதல்

மக்கள் பயன்படுத்திய பிறகு நீரைச் சரியானமுறையில் வெளியேற்ற வேண்டும். இவை வெளியேறும் பாதையை அடைத்து விட்டால் இந்த நீரும் நிலத்தில் தங்கி நிலத்திற்கு நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தி விடும். மனிதர்கள் வசிக்கும் பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவுக்கு இந்த அடைப்பும் முக்கிய காரணமாகிறது. அளவுக்கு அதிகமான கட்டுமானப்பணிகள் நடக்கும் போது பூமியில் ஏற்படும் அதிர்வுகள் நிலத்தை நெகிழச் செய்து நிலச்சரிவை ஏற்படுத்தி விடுகின்றன.

### நிலச்சரிவைத் தடுப்பது எப்படி

ஹாங்காங்கில் ஏற்படும் நிலச்சரிவுகளை தடுக்க அந்நாட்டு வல்லுநர்கள் சில வழிமுறைகளைப் பின்பற்றி பொதுவான விதிமுறைகளை வகுத்துள்ளனர்.

அவை மலைப்பகுதிகளில் சரிவான இடங்களில் நிறைய மரங்களை நட்டால் அவற்றின் வேர் நிலச்சரிவு ஏற்படாமல் தடுக்கும். அல்லது சரிவான இடங்களில் கொங்கீரிட் சுவர் கட்டலாம். மேல் இருந்து தண்ணீர் கீழே இறங்குவதற்கு தேவையான குழாய்கள் அமைக்க வேண்டும். நிலச்சரிவு ஏற்படக் கூடிய அபாய இடங்களில் வாழக்கூடாது. சரிவான இடங்களில் இரும்பு வலைகள் பதிக்க வேண்டும் வட்டவடிமான கம்பிகளைக் கொண்ட வலைகளாக இவை இருக்க வேண்டும் .

அப்போது தான் பாறைகள் உருண்டு வேகமாக கீழே விழாமல் தடுக்க முடியும். ஏற்கனவே நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களில் கட்டடங்கள், வீடுகள் கட்டவே கூடாது.

ஏனெனில் இந்தப்பகுதிகளில் பூமி உறுதியாக இருக்காது .மீண்டும் நிலச்சரிவு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் குழாய்களும், வடிநீர் குழாய்களும் உடைந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் கவனம் குறைந்தால் வெளியேறும் நீர் பூமியை இளக்கி நிலச்சரிவுக்கு வழி வகுக்கும். சரிவான இடங்களின் கீழ் தடுப்புச்சுவர்கள் அமைத்தால். தண்ணீர் வேகமாக விழுவதைத் தடுக்கலாம் நீரின் போக்கையும் மாற்றி அமைக்கலாம். கடுமையான மழைக்காலங்களில் மலைப்பிரதேசங்களில் வாழ்வதையே தங்குவதையோ தவிர்க்க வேண்டும். சரிவான இடங்களில் குழாய்களை ஆங்காங்கே அமைத்து வைத்தால் நிலத்தின் உள்ளிறங்கும் தண்ணீர் வெளியேறி பூமி நெகிழாமல் இருக்கும்.

### சீரான பராமரிப்பு அவசியம்

நிலச்சரிவு ஏற்பாடதவகையில் சீரான பராமரிப்புப்பணிகளை மேற்கொள்வது மிக மிக அவசியம்

1. சாய்வான பகுதிகளின் கீழே கழிவுகள் தேங்காத வகையில் தினமும் அவற்றை அகற்ற வேண்டும். இதனால் தண்ணீர் , கழிவு நீர் ஒரே இடத்தில் தேங்குவதை தவிர்க்க முடியும்.

2.உடைப்பு ஏற்பட்டுள்ள குழாய்கள் , நீர் வழிப்பாதைகளை உடனுக்குடன் சரி செய்து நீரின் போக்கை தடைபடாமல் இருக்க வசதி செய்ய வேண்டும்.

3.சரிவான பாதையில் கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவர்கள் இடிந்து போனாலோ, விரிசல், ஓட்டை விழுந்தாலோ உடனுக்குடன் சரி செய்யப்பட வேண்டும்.

4.கழிவு நீர்க்குழாய்களை தினமும் சுத்தம் செய்து நீர் தேங்காமல் பாதுகாக்க வேண்டும்.

5.கட்டடங்களை தாங்கி நிற்கும் வகையில் சாய்வு நிலங்களின் மேல் கட்டப்படும் சுற்றுச்சுவர்களில் விரிசல் ஏற்பட்டால் உடனுக்குடன் சரி செய்யல் வேண்டும்.

6. கட்டடங்கள் மீதோ சுற்றுச் சுவரிலோ சாய்மானச் சுவரிலோ செடி கொடிகள் வளர்வதை உடனடியாக நீக்க வேண்டும். செடிகள் வளர்தல் ; சுவற்றில் விரிசல் விழுந்து விடும்.

7.கட்டுமாணம் இருக்கும் பகுதிகள் தவிர்த்து மற்றப்பகுதிகள் அனைத்திலும் புல் வகையோ மரம் , செடி, கொடிகளோ கண்டிப்பாக வளர்க்க வேண்டியது அவசியம்.

8.கிணறுகள், ஆழ்துளைக்கிணறுகள், மண்ணுக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள குடி நீர் குழாய்களில் உடைப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இல்லையெனில் நிலச்சரிவு ஏற்படுத்தும், வெளியில் தெரியாதா காரணங்களாக இவை அமைந்து விடும்.

மழைக்காலம் தொடங்கும் முன் பராமரிப்புப் பணிகள் எதுவும் ஒன்று விடாமல் செய்து விடவேண்டும். இல்லையெனில் ஆபத்துத்தான்.

இந்தப்பராமரிப்புப் பணி களை தவிர ஆண்டுக்கு ஒரு முறை பொறி யியல் வல்லுநர்களின் மேற்பார்வையும் இன்றியமையாதது. பாதுகாப்பு வழி முறைகள் குறித்து அவர்கள் கூறும் அறிவுரைகளைப் பின்பற்றுவது மிக மிக அவசியம் . (ஓ-6)

# ஜனாதிபதித்தேர்தலில் எதிரணி வேட்பாளர் பொன்சேகாவை ஆதரிக்க மக்கள் தீர்மானித்துள்ளனர்

## ஐ.தே.க.எம்.பி- ரவி கருணாநாயக்கா

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றதும் அரசியல் அமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் மேலும் அரசியல் அமைப்பு மாற்றத்தின் ஊடாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை முன் வைப்போம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ரவி கருணா நாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித்தேர்தலில் எதிரணிக் கூட்டணியின் வேட்பாளாரை ஆதரிப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துவிட்டனர். எமது கூட்டணியை சுற்றி மக்கள் அணி திரள்கின்றனர்.

எனவே நாங்கள் வெற்றியை நோக்கிச் செல்கின்றோம்.இடம்பெயர்ந்தோர் விவகாரத்தில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.மேலும் வடக்கு கிழக்கு மக்கள் எம்மை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது. தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அரசியல் தீர்வு திட்டம் ஒன்று முன் வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி அன்றிலிருந்து இருந்து வருகின்றது. அரசியல் தீர்வு விடயம் காரணமாக பல தடவைகள் நாங்கள் தேர்தல்களில் தோல்விகளையும் சந்தித்துள்ளோம்.

நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை நாங்கள் முன் வைப்போம். ஆனால் இதற்கு பாராளுமன்றத்தில் மூன்று இரண்டு பொரும்பான்மை தேவையாகும். அதற்காக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பெறப்படும்.

மேலும் அரசியல் தீர்வு விடயத்தில் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் செல்லவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் எமது பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவும் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்வது குறித்து ஆராய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். (ஓ-4)

# போர்க்குற்றம் புரிந்த இலங்கைக்கு எதிராக டென்மார்க்கில் வழக்கு பதிவு செய்ய கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்ட போரின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் டென்மார்க்கில் செயல்படும் தமிழ் அமைப்புக்களினால் சேகரிக்கப்பட்டு இலங்கை அரசை நீதிக்கு முன் நிறுத்த டென்மார்க் அரச சட்டத்தரணி ஒருவர் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் விடுதலை வேட்கையை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட போரின் போது இலங்கை அரச படைகள் மேற்கொண்ட மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் டென்மார்க்கில் செயற்படும் தமிழ் அமைப்புக்களினால் சேகரிக்கப்பட்டு தமிழ் இளையோர் அமைப்பான திசைகள் அமைப்பினால் டென்மார்க்கில் சர்வதேச குற்றங்களை விசாரணை செய்யும் அரச சட்டத் தரணிக்கு அனுப்பப்பட்டிருந்தது. டென்மார்க்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தட்ப வெப்பநிலை மாறுபாட்டின் மாநாட்டில் கலந்து கொள்ள வரும் இலங்கை- அரச பிரதிநிதிகள் மனித குலத்திற்கு எதிரான அல்லது போர் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனரா என விசாரனை செய்யுமாறு தமிழ் அமைப்புக்கள் டென்மார்க் அரச சட்டத்தரணியை கேட்டிருந்தனர்.

திசைகள் அமைப்பினரின் வேண்டுகோளை பதிவு செய்துள்ள டென்மார்க் அரச சட்டத் தரணி, ஜக்கிய நாடுகள் சபையின் தட்ப வெப்ப நிலை மாறுபாட்டின் குழுவும் டென்மார்க் அரசும் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் தங்களால் இந்த மாநாட்டிற்கு வரும் அரச பிரதிநிதிகளை கைது செய்யவோ விசாரணை செய்யவோ முடியாது என திசைகள் அமைப்பினருக்கு அறிவித்துள்ளார்.

சூடான் அரச அதிபரை கைது செய்யுமாறு சர்வதேச மன்னிப்பு சபை டென்மார்க்கை கேட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடதக்கது. டென்மார்க் வரும் இலங்கை அரச பிரதிநிதிகள் ஜக்கிய நாடுகள் சபையின் தட்ப வெப்ப நிலை மாறுபாட்டின் மாநாடு தவிர்ந்த வேறு விடயங்களில் ஈடுபடுவதை கண்காணிக்கும் படி திசைகள் அமைப்பினர் டென்மார்க் அரச சட்டத்தரணியிடம் டென்மார்க்கில் செயல்படும் தமிழ் அமைப்புக்கள் சார்பில் கேட்டுக்கொண்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் இலங்கை தூதுக்குழுவினர் டென்மார்க் வருகையில் அவர்கள் மீது விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஓ-4)

# அமெரிக்காவில் உயர் கல்வியைத் தொடர விரும்புகிறீர்களா?

உலக மக்கள் பலரின் கனவாகத் திகழும் அமெரிக்கா 16 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நாடு. கடந்த 5 நூற்றாண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டிருக்கும் நாடு இது. இன்று உலகின் பல்வேறு மூலை முடுக்குகளிலிருந்தும் அமெரிக்கா நோக்கி பயணிப்பவர்கள் பலர்.

அமெரிக்கர்களின் வளைந்து கொடுக்கும் தன்மை, ஜனநாயகக் கொள்கைகள் மற்றும் அதன் உயரிய நடைமுறைகள், தொழில்



மயம், பொருளாதார வளர்ச்சி, தொழில் நுட்பப் புரட்சி, கவர்ச்சிகரமான சம்பளம், உலகத் தரம் வாய்ந்த கல்வி என பல்வேறு காரணங்களால் அமெரிக்கா பல வியப்பூட்டும் அம்சங்களை கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகின் ஒரே பவர் அமெரிக்கா என்றாகி விட்டது. அதைப் பற்றிய பல அம்சங்கள் பிரம்மாண்டமானதாகவே இருக்கின்றன. இலங்கை போன்ற நாட்டில் தனி மனிதனின் வருமானம் சராசரியாக ஒரு இலட் சத்து 30 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது.

அமெரிக்காவில் தனி மனித வருமானம் சராசரியாக 10 இலட்சமாக இருக்கிறது. இதிலிருந்தே அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதார நிலையை நாம் அறிய முடியும். கல்வியிலும் அமெரிக்கா முதன்மை பெற்று திகழ்கிறது. இதன் பல கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களும் உலகெங்கும் அவற்றின் தரத்திற்காக அறியப்படுகின்றன.

அதன் கல்வி நிறுவனங்களின் தரத்தைப் பாராட்டாத ஆசிரியர்களும் மாணவர்களும் எங்கும் கிடையாது.

### அமெரிக்கக் கல்வியின் சிறப்பு

அமெரிக்காவின் உயர் படிப்புகள் தொழில் முன்னேற்றத்திற்கு கூடுதல் மதிப்பைப் பெற்றுத் தருபவை. அமெரிக்கப் படிப்பு, பணி முன்னேற்றத்திற்கு அடித்தளமாக இருப்பதோடு தலைமை பண்புகளையும் மாண்புகளையும் வளர்க்கிறது.

மனித் அறிவு எல்லைகளை விரிவுபடுத்துவதோடு நவீன தொழில்நுட்பம், கலைத்தன்மையுடன் கூடிய ஆய்வு மற்றும் சிறப்பான பயிற்சி அம்சங்களையும் அமெரிக்கக் கல்வி வழங்குகிறது. அமெரிக்காவில் பெறும் கல்வி ஒருவரின் வாழ்வு முத்திரையாக விளங்குவதோடு அவரது வாழ்க்கை முழுவதும் அவரை சிறந்த பாதையில் இட்டுச் செல்கிறது.

பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு படிப்பதால் உலகளாவிய பல தொடர்புகளை இது மாணவருக்கு வழங்குகிறது.

படிக்க விரும்பும் பிரிவு, கல்லூரி போன்றவற்றில் அதிக அளவிலான வாய்ப்புக்கள் உள்ளதால் கல்வித் தரமும் மிக சிறப்பாகவே இருக்கிறது. இந்த சிறப்பம்சங்களைத் தாண்டி அமெரிக்கக் கல்வியானது அதிக செலவைக் கொண்டதாகவே இருக்கிறது. எனினும் உத வித் தொகை, ஸ்பொன்சர்ஷிப் போன்ற பல உதவிகள் கிடைப்பதாலும் மாணவரின் கௌ ரவத்தையும், தரத்தையும் உறுதியாக மேம் படுத்துவதால் அமெரிக்கக் கல்வியானது பெரிதும் விரும்பப்படுகிறது.

### அமெரிக்க கல்விக்கு திட்டமிடல் சில கட்டங்கள்

**செப்ரெம்பர் :** கல்லூரிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது தான் முதல் நடவடிக்கையாக அமைய வேண்டும். மாணவர் தகவல் மையங்கள் / நூலகங்கள் / இன்டர்நெட் மூலமாக கல்லூரிகளை அறியலாம். ஏற்கனவே பயின்ற நண்பர்கள் / உறவினர்கள் மூலமாக அறிவதும் நல்லது. 10 முதல் 15 கல்லூரிகளைத் தேர்வு செய்து பட்டியல் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

இதன் பின் பின்வரும் கட்டங்களை வகுத்துக் கொள்ளலாம்.

**ஒக்டோபர் – நவம்பர் :** டோபல், ஜி.ஆர்.இ. ஜிமேட் போன்ற அடிப்படைத் தகுதித் தேர்வுகளுக்கான பயிற்சியைத் தொடங்க வேண்டும்.

**டிசம்பர் – மே :** இது போன்ற தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பது.

**ஜனவரி :** படிக்க விரும்பும் கல்லூரி / பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்து விண்ணப்பங்களைப் பெறுவது மற்றும் விண்ணப்பிப்பது.

**மார்ச் – ஜூன் :** நவம்பருக்கு முன்பாகவே டோபல் போன்ற தேர்வை எழுதுவது, ஒரு வேளை தேவையான மதிப்பெண் பெறாத போது ஒக்டோபரில் மீண்டும் தேர்வு எழுதி தகுதி பெறுவது.

**மே :** எந்த ஆசிரியரிடமிருந்து பரிந்துரை கடிதத்தைப் பெறுவது என முடிபு செய்வது.

**ஜூலை :** கல்லூரி விண்ணப்பங்களை




நன்றாகப் படித்து பரிசீலித்து குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் விண்ணப்பிப்பது.

**ஆகஸ்ட் :** விண்ணப்பத்துடன் அனுப்பப் பட வேண்டிய கட்டுரை / படிப்பின் நோக்கம் பற்றிய அறிக்கையை எழுதி நண்பர்கள் / ஆசிரியர்களிடம் காட்டி மேம்படுத்துவது.

**செப்டெம்பர் :** டோபல் போன்றவற்றில் கூடுதல் புள்ளிகள் பெற விரும்பினால் மீண்டும் எழுதுவது. பெறப்பட்ட பரிந்துரை கடிதங்களை அனுப்புவது.

**ஒக்டோபர் :** கட்டுரைகள் / விண்ணப்பங்களை இறுதி செய்து கல்லூரிகளுக்கு அனுப்புவது.

**நவம்பர் :** இவை அனுப்பப்பட்டதை உறுதி செய்து கொள்வது.

**டிசம்பர் :** கூடுதல் விபரங்கள் கேட்கப்பட்டால் உடனடியாக பதில் அளிப்பது.

**ஏப்ரல் – மே :** கல்லூரிகளிலிருந்து சேர்க்கை பற்றிய தகவல்கள் கிடைக்கத் தொடங்கும் காலம் இது. அழைப்பு அனுப்பப்பட்டனவற்றில் ஒன்றை தேர்வு செய்து முடிவு செய்ய வேண்டும். விடுதியில் படிக்க விரும்புவோர் அதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். பாஸ்போர்ட் இல்லாத பட்சத்தில் உடனடியாக விண்ணப்பித்துப பெற வேண்டும்.

**ஜூன் :** விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்வது. படிப்பு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பே அமெரிக்காவில் சென்று சேர திட்டமிட வேண்டும்.

**ஜூலை – ஆகஸ்ட் :** பயணம் மேற்கொள்வது. அமெரிக்கக் கல்வியின் சிறப்பு, அதற்கு திட்டமிடும் முறை மற்றும் விண்ணப்பம் பெறுவது ஆகியவற்றைப் பார்த்தோம். அமெரிக்கக் கல்விக்கு விருப்பப்பட்டு விண்ணப்பிப்பவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சங்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்....



# யாழில் சர்வதேச கணனி மற்றும் உயர்கல்வியை வழங்கும்

# UNI ICT Campus & Nottingham College of London



Mrs. S. Selvathashan
B.Sc (Hons)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தொழில்சார் உலகிற்கான கல்வித் தராதரத்தைப் பெறுவதற்காக ஆர்வம் உள்ள தொழில்வாண்மைப் பெறத் துடிக்கும் மாணவர்கட்குச் சரியான தெரிவு NCL தான் என்பதற்குரிய காரணங்கள் இங்கே தரபபடுகின்றன. அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் மூலம் உன்னத அறிவை உருவாக்குதல்.

NCLல் பயிற்றுவிப்பாளர்கள் தாங்கள் கற்பிக்கின்ற புலத்திலுள்ள உண்மையான உலக அனுபவங்களை அவர்களிடமிருந்து நீங்கள் கற்பீர்கள். அவர்கள தங்களில் தேங்கியுள்ள அறிவை உங்களுடன் பகிர்ந்து கொண்டு பொருத்தமான, வலிமையான ஆதரவை உங்களுக்கு வழங்கி, நீங்கள் கற்று முடிந்ததும் உங்கள் தொழிலுக்கான திட்டத்தை வகுக்க வழிகாட்டுவார்கள். கைத்தொழில் - நடைமுறை டிப்ளோமா வேலைத்திட்டங்கள். பட்டதாரி வேலைத் திட்டம் மற்றும் பாடநெறி உள்ளடக்கம் ஆகியவற்றை நவீன உலகிற்கேற்ற செயல் முறையும், பிரயோகமும் சார்ந்ததாக NCL நிறுவனம் அதை வடிவமைத்துள்ளது. உங்களின் விருப்பத்துக்குரிய தொழில் புலத்திற்கு உதவக் கூடியவாறு திறன் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்படுகின்றது. கல்வியை நோக்கிய அனுபவம்சார் அணுகுமுறை. நவீன உலகிற்கேற்ற கருத்து பூர்வமான செயலடிப்படையிலான வெளிப்பாடுகளுள்ள கல்வியில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம். அதனால் தான் உங்கள் விருப்பிற்கமைவான தொழில்புலங்கட்கு உதவக் கூடியத் திறன்களை, அனுபவங்களை நீங்கள் விளங்கிக் கொள்வதில் NCL நிறுவனம் கவனம் செலுத்துகின்றது. உலக ஒழுங்கிற்கேற்ப அதற்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்ட படைப்பாற்றல் மிகு கற்றல் வேலைத்திட்டம். NCL நிறுவனத்தினராகிய நாம் பல மாணவர்கள் உற்சாகமுள்ள பணியாளர்களாகவும் ஈடுபாடுள்ள குடும்ப உறுப்பினராகவும் இருப்பதை நன்கறிவோம். நவீன உலகிற்கேற்ப ஒழுங்குகள், கடமைகட்கேற்ப இசைவுபடுத்தக் கூடியவாறு உங்களின் வசதிக்கமைய, நெகிழ்வுத்தன்மையுள்ள வகுப்புகளும், படைப்பாற்றல் மிகு வேலைத் திட்டங்களும் எங்களால் வழங்கப்படுகின்றன. அதி தேவையுள்ள டிப்ளோமா வேலைத்திட்டங்கள் தொழிற்சந்தையில் மிகவும் தேவை எனக் கருதப்படும் பகுதிகளில் எங்கள் கலைத்திட்டத்தைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்து வருகின்றோம். தொழினுட்ப ரீதியாக உயர்வடைந்த கற்றல் சூழல்கள். NCL மாணவர்கள், தங்கள் ஒப்படைகட்கான தொடர்பு பெற வலையமைப்புடன், பாதுகாப்புடன் தொடர்புற, மின்னஞ்சலை சரி பார்க்க, தங்கள்



நண்பர்கள் தொழில்வாண்மையாளர்களுடன் NCL மாணவர்கட்கு வசதி செய்யப்பட்டுள்ளது. உங்கள் கல்வியை முதல் வருடம் இலங்கையில் பின் இரண்டாவது வருடம் UK, Netherlands (Holland), Malta, Singapore, Malaysia, Canada, Australia இல் தொடரலாம். அல்லது முழு வருடமும் இங்கேயே இருந்து (யாழ்ப்பாணத்தில்) பட்டத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

Nottingham College of London நம் நாட்டு எதிர்கால மாணவர்களின் நலன் கருதி British, Netherlands, Malta, Singapore, Malaysia, Canada, Australia பல்கலைகழகங்களின் வழிகாட்டலுடனும் B.Sc. (Hons) in Multimedia / Computing / IT / BBA, HND in Pharmacy (SLMC) , Diploma in Marketing,IELTS and MBA undergraduate and postgraduate Programme எனும் கற்கை நெறியினை எமது யாழ் மாணவர்களுக்காக வடிவமைத்துள்ள அதேவேளை எமது அனைத்து பட்டப்படிப்புக்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுள்ள பட்டப்படிப்புக்கள் ஆகும்.

இதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் எமக்கு இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள அனுமதி பத்திரத்தை எமது நிறுவனத்திற்கு நீங்கள் வருகை தந்து பார்வையிட முடியும்.

மேலும் எமது இக்கற்கை நெறியின் பாடபரபபானது தகவல் தொழில்நுட்பம் (Multimedia / Computing), ஆங்கிலம் (English) ஆண்மை விருத்தி (Personality Development) ஆகியவற்றை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியை பெற விரும்புகின்ற மாணவர்கள் இதனை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற போது அந்த வாயப்பினை எமது கல்லூரியினூடாகவே இலகுவாக பெற்றுக் கொள்கின்றனர். NCL ஆனது தமது சர்வதேச வலை பின்னலின் ஊடாக UK, Netherlands (Holland), Malta, Singapore, Malaysia, Canada, Australia ஆகிய நாடுகளில் உள்ள அனேகமான பல்கலைகழங்களிலும் கல்லூரிகளிலும் நம் நாட்டு மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்காக வாய்ப்பினை இலகுவாக பெற்றுத் தருவதால் மாணவர்கள் அதிக சிரமமின்றி வெளிநாட்டு உயர் கல்வியெனும் கனவினை நனவாக்கி கொளள சந்தர்பம் கிடைக்கிறது.


இன்றைய குழு ரீதியாக செயற்திறன் மிக்க உற்பத்தித் திறனுடன் கூடிய தொழில் சூழல்கட்கு அவசியமான பொருத்தமான திறன்களை உருவாக்கவும், விளக்கமளிக்கவும், தொடர்பாடல் செய்யவும் உரிய ஆற்றலைப் பேணுவதில் ஒரு உயர்கற்றல் நிறுவனம் போன்று NCL பணிபுரிகின்றது. இத்திறன்களையும், கற்றல் வெளிப்பாடுகளையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு, நேரடி வகுப்பறைக் கற்றல்கள் மற்றும் வலைத்தள அடிப்படையிலான மொடியூல்கள் உள்ளிட்ட கற்பித்தல் தொகுதிக்கு ஏற்ற கற்றல் மாதிரிகள் NCL இனால் உறுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வார மற்றும் வார இறுதி நாட்களில் முழு நேரமாக இடம்பெறும் இக்கற்கை நெறியானது மாணவர்களுக்கு மிகக் குறுகிய காலத்திலேயே அதி சிறந்த பயன்களை வழங்குவதோடு இதனால் கிடைக்கப்பெறும் சான்றிதழ்களின் சர்வதேச அங்கீகாரமானது எப்போதும் எந்த இடத்திலும் மாணவர்களாகிய உங்களுக்கு சிறந்தவொரு அங்கீகாரமாகவும் தொழிற்துறைத் தகைமையாகவும் (Professional Qualification) இதன் மூலம் கிடைகக்கும் அதி சிறந்த பயன்பாடுகளாகும்.

எனவே Nottingham College of London / UNI – ICT Campus இல் இணைந்து பயின்று நீங்களும் வெற்றி பெற எமது யாழ கல்லூரி உங்களை அன்புடன் அழைக் கிறது.

இக் கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உடன் யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கீழ்வரும் நிறுவனத்தில் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch :- UNI – ICT Campus & Nottingham College of London (Affiliated University College)
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 – 321 – 6433 - Mobile :- 0777 – 110862
**Colombo Head Office :-**
Nottingham College of London
No :- 36 1/1, Station Road, Colombo – 06, Sri Lanka
T.P :- +94 (0) 11 2 598059, Fax: +94 (0) 11 2552496



நல்லூர் முடமாவடிப் பகுதியில் நடைபெற்ற நல்லூர் கூட்டுறவு நகர் திறப்பு விழாவில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில் நந்தனன் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## ஜனாதிபதி மஹிந்தாவுக்கு ஆதரவாக

# கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை விரைவில் நல்லசெய்தி வரும்

## -எஸ். பி. திஸ்ஸநாயக்க-

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண முடியும். அதைவிடுத்து கிராமங்கள் தோறும் படை முகாம்களை அமைப்பதால் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்ற ஐ.தே.க. விலிருந்து சுதந்திரக் கட்சிக்கு மாறியுள்ள எஸ்.பி. திஸ்ஸநாயக்க கூறினார்.

ஜெனரல் பொன்சேகா வெற்றி பெற்றால் இராணுவ இராச்சியமே தலை தூக்கும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை ஜனாதிபதி மஹிந்தவுக்கு பெற்றுக்கொடுக்க நான் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றேன். விரைவில் நல்லதொரு செய்தியை வெளியிடுவேன் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கருத்து தெரிவித்த போதே எஸ்.பி. திஸ்ஸ நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

வட பகுதியில் கிராமம் கிராமமாக இராணுவ முகாம்களை அமைக்க வேண்டுமென்றும் இராணுவத்தினருக்கு மேலதிகமாக படைகளைச் சேர்க்க வேண்டுமென்றும் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை கேட்டிருந்தார். இதுவே ஜெனரல் பொன்சேகாவின் சுயரூபமாகும்.

அத்தோடு அவர் யுத்த மானசீகம் கொண்ட ஜே.வி.பியுடன் இணைந்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். எனவே தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்நாட்டு ஏனைய மக்களுக்கும் ஜனநாயகம் கிடைக்கப் போவதில்லை.

மாறாக ஆணையிடும் அதிகாரம் கொண்ட இராணுவ ஆட்சியே உருவாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியின் மூலமே




நிலையான சமாதானத்தையும் வழங்க முடியும் என்றார்.

வட பகுதி இளைஞர்கள் வெறுமனே கனவு கலைந்து ஆயுதம் ஏந்தவில்லை. அம் மக்களுக்கு அரசியல் மொழி உரிமை கலாசாரப் பிரச்சினைகள் காணப்பட்டன.

எனவே தான் ஆயுதம் ஏந்தினார்கள். எனவே அம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும். இன்று அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள குழுவினர் யுத்த வெற்றிக்கு காரணமாக அமைந்தார்கள். இதேபோன்று அடுத்த பாராளு மன்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உருவாகும் புதிய பாராளுமன்றத்தின் ஊடாக நிச்சயம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்றார். (ஓ-2-4)

## பொன்சேகாவுடன் ஒப்பிடுகையில் திஸ்ஸநாயக்க மடுவை போன்றவர்

## -ஐ.தே.கட்சி எம்.பி.கிரியெல்ல-



(கொழும்பு)

யார் கட்சியை விட்டு வெளி யே றினாலும், பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் வெற்றியை தடுக்க முடியாது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்தர்ப்பத்தில் எஸ்.பி. ஜனாதிபதியுடன் கூட் டுச் சேர்ந்திருப்பதானது, ஐக்கிய தேசிய கட் சியை காட்டிக் கொடுக்கும் ஒரு செயலாகும். என்று அந்த கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



தன்னைப் பொது வேட்பாளராக நியமிக்காமையினாலேயே எஸ்.பி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்துள்ளார். அவர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சரத் பொன்சேகாவுடன் ஒப்பிடுகையில் எஸ்.பி. மடுவை போன்றவர் ஜெனரல் மலையைப் போன்றவர் என்றும் அவர் கூறினார். எஸ்.பி. திஸ்ஸநாயக்க கட்சியை விட்டு வெளியேறியமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து நாடு பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் இந்த வேளையில் நாட்டை பாதுகாக்க வேண்டியது பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க.வின் பாரிய பொறுப்பாகும். இதன் காரணமாகவே நாம் எதிர்க்கட்சிகளின் கூட்டணியை அமைத்து பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்துள்ளோம்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதில் என்ன தவறு உள்ளது. எமக்கு தேவை தற்போதுள்ள அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பி மீண்டும் நாட்டின் ஜனநாயகத்தை தோற்று வித்து நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதே அதற்காகவே நாம் இப்போது கூட்டு சேர்ந்துள்ளோம்.

அதை பொறுத்துக்கொள்ள முடியாத எஸ். பி. போன்ற சுய நலவாதிகளே கட்சியை விட்டு வெளியேறி மஹிந்தரா ஜபக்ஷ குடும்ப அரசியலுக்கு உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குகின்றார்கள். இவர்களின் உதவியால் மஹிந்த வுக்கு ஒரு போதும் மீண்டும் ஜனா திபதியாக முடியாது என்றும் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள எஸ்.பி எம் தலைமை மீது பாரிய குற்றச்சாட் டுக்களை சுமத்தியுள்ளார். அவரிடம் நாம் கேட்பது இதுதான் 9 வருடங்களாக ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்த போது இந்தக் குற்றங்கள் அவரின் கண்களுக்கு படவில்லையா? என்பதேயாகும் என்றார். (ஓ-4)

## மனித உரிமைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலைய ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமை தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல நோக்குக்கூட்டறவுச் சங்க மண்டபத்தில் நிறுவன பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய ஓவியப்போட்டியில் சிறந்த ஓவியங்களுக்காக சான்றிதழ்களும் பெறுமதியான பரிசில்களும் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மனித உரிமைகளை மதிக்கத் தெரிந்த ஒரு சமூகத்தை அடிமட்டத்தில் இருந்து உருவாக்க வேண்டிய தேவை இந்நிகழ்வின் மூலம் உணர்த்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி நிறுவனங்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் என பல துறைகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-9)

## மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக மூக்கு கண்ணாடிக்கு விண்ணப்பித்த இரு பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கிராம்புவிலைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம், கச்சாய் தெற்கைச் சேர்ந்த ஆர். தயாநிதி ஆகியோருக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஶ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)

# சரத் பொன்சேகா வெற்றிபெற்றால் நாட்டில் குழப்பமான சூழ்நிலை ஏற்படும்

## -ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா ஒருபோதும் வெற்றி பெற முடியாது. அவ்வாறு வெற்றி பெற நேர்ந்தால் உடனடியாக நாட்டில் இராணுவ ஆட்சியைப் பிரக பிரகடனப்படுத்துவார் என்று மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் நகர பிஷ்ருல் ஹாபி ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வடமாகாண முஸ்லிம்கள் ஆதரவு தெரிவிப்பதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா தனது பதவியுயர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் முரண்பட்டுக்கொண்டே ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

அத்தோடு நில்லாமல் தமது ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற வேட்கை காரணமாகவே எதிர்க்கட்சியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எவருக்கும் துணிவில்லாத நிலையில் அவர் சந்தர்ப்பத்தை பயன்படுத்த முனைந்துள்ளார்.


யதார்த்தத்தில் அவருக்கு எத்தகைய அரசியல் அனுபவமும் கிடையாது. கட்சியும் கிடையாது. ஆறு மாதத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக அவர் கூறியுள்ளார். இப்படி எத்தனை பேரைக் கண்டிருப்போம் ஒன்றும் நடவாது .

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு போதும் வெற்றி பெற முடியாது அவ்வாறு வெற்றி பெற நேர்ந்தால் உடனடியாக நாட்டில் இராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்துவார். தமக்குத் தேவையானவர்களை முப்படைகளுக்கும் தளபதிகளாக நியமிப்பார் நாட்டில் பாரியதொரு குழப்பகரமான சூழலை ஏற்படுத்துவார் எல்லா சுதந்திரங்களுக்கும் வேட்டு வைப்பார் இவ்வாறான தொரு விபரீதமான விளைவுக்கு இந்நாட்டு முஸ்லிம்கள் ஒரு போதும் துணைபோக மாட்டார்கள் என்றார். (ஓ-2-4)

# நரமாமிசம் உண்ணும் வழக்கம் இருந்தற்கு ஆதாரமான மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

தென்மேற்கு ஜேர்மனியில் 7ஆயிரம் ஆண்டுகள் பழமையான மனித புதைகுழி யொன்றில் நரமாமிசம் உண்ணும் வழக்கம் தொடர்பான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக பூகற்பவியலாளர்கள் தெரிவித் தனர்.

ஐரோப்பாவில் ஆரம்ப நியோலிதிக் காலத்தில் மேற் படி நரமாமிசம் உண்ணும் வழக்கம் இருந்தமை தொடர் பான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இந்த ஆய் வுக்கு தலைமை தாங்கிய பிரான்ஸின் போர் டியர்க்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புருனோ போலெஸ்டின் கூறி னார்.



ஹெர்க்ஸ்ஹெய்ம் என்ற கிராமத்திற்கு அருகே அகழ்ந் தெடுக்கப்பட்ட சுமார் ஐந்நூறு மனித எச்சங்கள் நரமாமிசத்திற்காக அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. என்பதற்கான சான் றுகளைக் கொண்டிருந்ததாகவும் மேற்படி மனித எச்சங்களில் சிறுவர்களதும் பிறக்காத குழந்தைகளதும் எச்சங்கள் உள்ளடங்கி யிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் மிருக இறைச்சிகளை நெருப்பில் வாட்டி எடுத்தமை போன்று மனித இறைச்சியும் வாட்டப்பட்டுள்ளமைக்கு கண்டு பிடிக்கப்பட்ட எச்சங்கள் ஆதாரமாக உள்ள தாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் மேற்படி எலும்புகள் நரமாமி சங்கள் பெறுவதற்காகத்தான் வாட்டப்பட் டுள்ள என்பதை நிரூபிப்பது கடினம் என் பதை யும் புருனோ போலெஸ்டின் கூறினார்.

(ஓ-2-4)

# காலநிலை தொடர்பான உச்சிமாநாடு டென்மார்க்கில் ஆரம்பம்






ஐக்கிய நாடுகள் சபையின் கால நிலை மாற்றம் தொடர்பான முக்கியத் துவம் மிக்க உச்சிமாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்து கொள்வதற்காக 192 நாடுகளின் பிரதிநிதிகள் டென் மார்க்கின் தலைநகரில் கூடியுள்ள னர்.

உலகம் ஒரு போதும் சந்தித்திராத மிக முக்கியத்துவமான மாநாடு என மேற்படி மாநாட்டை விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ள னர்.

இந்த இரு வார மாநாட்டில் 15 ஆயிரம் பிரதிநிதிகளும் 100 உலகத் தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த உச்சிமாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பான பேச்சாளர் வைவோ டி போயர் கடந்த 17 வருடங்களில் இல்லாதவாறு அதிகளவான நாடுகள் தற்போது காலநிலை மாற்றம் தொடர்பான உறுதிப்பாடுகளை எடுத் துள்ளதாகத் தெரிவித்தார்.

வறிய நாடுகளுக்கு நிதி மற்றும் சுற்றுச் சூழல் நட்புற வான தொழில் நுட்ப உதவிகளை வழங்கவும் 2050 ஆம் ஆண்டுக்குள் காபன் வெளியீடுகளைக் கணிசமான அளவுக்கு குறைக்கவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் ஆரம்பமான உச்சி மாநாட்டில் எதிர்வரும் தசாப்த காலப் பகுதி யில் காபன் மாசு வெளியீடுகளை மூன்றி லொருபகுதியாகக் குறைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

இம் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரித்தானியப் பிரதமர் கோர் டன் பிறவுண், பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்கோலி, இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# அமெரிக்காவில் முதலாவது ஜனாதிபதியின் கடிதம் 3.2 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்பனை

(அமெரிக்கா)

அமெரிக்காவில் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டனால் எழுதப்பட்ட கடித மொன்று ஏல விற்பனையொன்றில் 3.2 மில் லியன் விலை போய் சாதனை படைத்துள் ளது.

நியூயோர்க் நகரில் உள்ள கிறிஸ்ரி ஏல விற்பனை நிலையத்தில் இடம் பெற்ற ஏல விற்பனையில் 1787ஆம் ஆண்டு ஜோர்ஜ் வாஷிங்டனால் அவரது மைத்துனரான புஷ் றொட் வாஷிங்டனுக்கு எழுதப்பட்ட 4 பக்க கடிதம் விற்பனையாகியுள்ளது.

நாட்டில் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வது தொடர்பில் வலியுறுத்தி எழுதப்பட்டி ருந்த இக் கடிதம் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக புஷ்றொட் வாஷிங்டனின் வம்சாவளி யினரின் உடைமையாக இருந்து வந்தது.

இதற்கு முன் 2002 ஆம் ஆண்டில் ஜோர்ஜ் வாஷிங்டனால் எழுதப்பட்ட கடித மொன்று 8 இலட்சத்து 34 ஆயிரத்து ஐநூறு அமெரிக்க டொலருக்கு விற்பனையாகியது குறிப்பிடத்தக்கது. (ஓ-2-4)

# பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி

(இஸ்லாமாபாத்)

வடமேற்கு பாகிஸ்தானில் 5.6 ரிச்டர் அளவிலான பூமியதிர்ச்சி ஞாயிற்றுக்கிழமை தாக்கியுள்ளது.

இந்த பூமியதிர்ச்சியின் அதிர்வலைகள் தலைநகர் இஸ்லாமாபாத் உள்ளடங்கலாக நாட்டின் பல பகுதிகளில் உணரப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

மன்ஸெஹ்றா மாகாணத்திலிருந்து வட கிழக்கே சுமார் 296 கிலோ மீற்றர் தொலை வில் மையங்கொண்டிருந்த மேற்படி பூமிய திர்ச்சியால் ஏற்பட்ட சேத விபரங்கள் அறிக் கையிடப்படவில்லை. (ஓ-4)

# இந்திய காங்கிரஸ் கட்சியின் கோலாகல ஆண்டு விழாவும் தலைவியின் பிறந்த தின விழாவும்

(டில்லி)




காங்கிரஸ் கட்சியின் 125 ஆவது ஆண்டு விழாவையும் கட்சித் தலைவர் சோனியா காந்தியின் 64ஆவது பிறந்த நாளையும் இன்று கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு காங் கிரஸார் தயாராகி வருகின்றனர்.

இந்நிகழ்வை முன்னிட்டு காங்கிரஸ் கடந்து வந்த பாதை யையும் இந்தியாவை ஆட்சி செய்த பாங்கையும் இன்றைய தலைமுறையினருக்கு முழுமையாக எடுத்துச் சொல்லும் வகையில் ஆண்டு முழுவதும் கருத்தரங்குகள், போட்டிகள், கூட்டங்கள் நடத்துவது என பல்வேறு திட்டங்களை வகுத் துள்ளனர்.

மேலும் சோனியாவின் பிறந்தநாளை முன்னிட்டு காங் கிரஸ் ஆட்சியில் இருக்கும் போது அதிக நாட்கள் கட்சித் தலை மைப்பொறுப்பில் இருந்தவர், பிரதமர் பொறுப்பை விட்டுக் கொடுத்தவர், மோதிலால், ஜவஹர் லால், இந்திரா, நேரு வரிசையில் காங்கிரஸ் தலைவர் பொறுப்பை சுமக்கும் ஐந்தாவது வாரிசு என சோனியா காந்தி தாங்கி வரும் பல்வேறு பாத்திரங்களை முன் வைத்து விழாவாக கொண் டாடவுள்ளதாகவும் இத்தாலியில் பிறந்து இந்தியாவின் அறிவிக்கப்படாத முதல் பெண்மணி அந்தஸ்த்தில் இருக்கும் சோனியாவை அன்னிபெசன்ட் நீலிசென் குப்தாவுக்கு இணையாக வர்ணித்து புகழ் பாடி புளகாங்கிதம் அடையவும் காங்கிரஸார் தயாராகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-2-4)

# தமிழ் நாடு அரசியலில் அனைவர் மனதிலும் பரபரப்பு கேள்வி அடுத்த முதல்வர் யார்?



முதல்வர் கரு ணாநிதி அடுத்த ஆண்டு மத்தி யில் ஓய்வு பெறப் போவதாக அறி வித்துள்ளதால் அடுத்த முதல்வர் யார் அடுத்த துணை முதல் வர் யார், என்ற கேள்விகள் எழ ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே எதிர்பார்த்து வருவது போல மு.க.ஸ்டாலினை முதல்வர் பதவியில் அமர்த்த தலைவர் தீர்மானித்து விட்டார் என்று தி.மு.க.வினர் மத்தியில் பேச்சு அடிபடுவதால் அவர் வசித்து வரும் துணை முதல்வர் பதவி யில் யார் அமர்த் தப்படுவார் அல்லது துணை முதல்வர் பதவி அகற்றப்படுமா என்ற கேள்வி களும் எழுந்துள்ளன.

அதேசமயம் இந்த அதிகார மாற்றம் சுமூ கமான முறையில் நடைபெறுமா என்று சிலர் சந்தேகம் எழுப்புகின்றனர். காரணம் மு.க. அழகிரி மற்றும் கனிமொழி.

அழகிரியை மத்திய அரசியலுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மாநிலத்தில் ஸ்டாலினுக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் திட்டத்தில்தான் அவரை எம்.பி.யாக்கி மத்திய அமைச்சர் பதவியையும் கருணாநிதி வாங் கிக் கொடுத்தார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இருப்பினும் மத்திய அமைச்சர் பதவியில் அழகிரிக்கு திருப்தியில்லை. இதற்கான காரணங்கள் அனைவரும் அறிந்ததே. அவ ரால் மத்திய அரசில் எத்தனை காலத்திற்கு நீடிக்க முடியும் என்பது அவருக்கே தெரிய வில்லை. மீண்டும் மாநில அரசியலுக்கே அவர் திரும்பி வர விரும்புவதாகவும் நெருக் கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனால் முதல்வர் பதவி ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டால் அழகிரிக்கு நிச்சயம் ஏதா வது முக்கிய பதவியை தந்தாக வேண்டிய நிலை ஏற்படலாம். அது கட்சிப் பதவியாக இருக் கலாம் என்கிறார்கள்.

ஸ்டாலினுக்குக் கீழ் அழகிரி துணை முதல் வராக வாய்ப்பில்லை. இதனால் அவருக்கு கட்சியின் மிக மிக முக்கியப் பதவி வழங்கப் படலாம் என்று தெரிகிறது.







அந்த வகையில் அவருக்கு மாநில அள விலான பொறுப்பை வழங்கினால் ஜெயல லிதாவுக்கும் வளர்ந்து வரும் தே.மு.தி. க.வுக்கும் அவர் நிச்சயம் மாபெரும் சவாலாக அமைவார் என்பது அழகிரியின் ஆதரவாளர் களின் எண்ணம்.

இது தவிர முதல்வரின் மகளான கனி மொழியும் முக்கியமான பதவிக்காகவே காத் திருக்கிறார் அவருக்கு மத்திய அமைச்சர் பதவி கிடைக்கும் என எதிர்பார்ப்பு பலமாகவே இருந்து வந்தது ஆனால் அதற்கான சாதக மான நிலை ஏற்படாமலேயே உள்ளது இத னால் அழக கிரிக்கு மாநில மட்டத்தில் முக்கிய பதவி வழங் கப்பட்டால் அவர் விலகும் மத்திய அமைச்சர் பதவிகனிமொழிக்குத் கிடைக் கலாம்ஸ்டாலின் ராகுல் காந்தி இடையே நல்ல புரிந்துணர்வு இருப் பதால் முக்கிய கூட்டணி கட்சியான காங் கிஸ் முதல்வர் கருணாநிதிக்கு முக்கியத்துவம் அளிப் பதைப் போன்றே ஸ்டாலினுக்கும் தொடர்ந்து ஆதரவு வழங்கலாம்என்றே தெரிகிறது .(ஓ-2-4)

# "நாவலர் எழுந்தார்"



நேற்றைய தொடர்ச்சி

"தமிழினத்தின் தலையாய உறுப்பினர்களாகி நாம் திரு. பொன்னம்பல முதலியார்



இராமநாதன் எமது பிரதிநிதியாய் அமர்வதற்காக எல்லாத் தகுதிகளும் வாய்ந்தவர் என்று ஏக மனதாகத் தீர்மானிக்கிறோம். சமூகத்தின் உயர் அந்தஸ்தில் விளங்கு பவரும் சுதந்தி ரமான வருவாயை உடைய வருமான இவரே எல்லா வகையிலும் தகுதி வாய்ந்த வேட்பாளர் என்று இந்த கூட்ட உறுப்பினர் யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர்"

நாவலரது ஆசியோடும் அரவணைப் போடும் ஆரம்பமான இராமநா தன் அரசியல் வாழ்க்கை ஐம்பது ஆண்டு களாக அரசியல் வானில் அவரை பிரகாசிக்க வைத்தது மட்டுமன்றி நாவலரின் வாரிசாக அவரின் சிந்தனைகளை பன்மடங்காக உயர்த்திச் செயற்படவும் வைத்தது. திண்ணைப்பள்ளிக் கூடங்களைப் பாடசாலைகளாக மாற்றுவதால் மட்டும் நாவலர் பணி மட்டுப்படுத்தப் பட்டு விட்டது. காரணம் பணமுடக்கமும் நம்மவரின் ஆதரிவின்மையுமே .

ஆனால் இதற்கப்பால் சென்று பாடசாலைகளை பல்கலைக்கழக கல்லூரிகளாக இயங்கும் தகுதி பெற்றனவாக இடவசதிகள் கொண்ட கலைக்கூடங்களாக மாற்றிய பொருமை சேர்.பொன் இராமநாதன் ஒருவருக்கு மட்டும் தான் உண்டு. இது நாவலர் தியாகத்திற்குக் கிடைத்த பெரிய பரிசாகும்.

இருந்தும் நாவலரை எமது சமூகம் மறக்கவில்லை. அவரை எமது சமயத்தினதும் சமூகத்தினதும் காவலராகவே நிறுத்தி வைத்து வந்துள்ளது. சந்தர்ப்பம் வரும்போதெல்லம் அவரது பணிகளை நினைவுகூற தவறவில்லை.1968 ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாகாநாடு நடைபெற்றது யாவரும் அறிந்ததே. அப்போது தமிழ் வளர்த்த செம்மல்களுக்குச் சென்னை மரீனாக்கடற் கரையில் சிலை எழுப்பப்பட்டிருந்தது. ஆனால் தமிழக திரு வாவடுதுறை ஆதீனத் திலேயே "நாவலர்" எனப் பட்டமளித்து கௌரவிக்கப் பட்ட நாவலர் ஐயா அவர்களின் சிலை இப் பட்டியலில் இடம்பெறாததை அம் மகா நாட்டிற் கலந்து கொண்ட நம்மவர் கண்டு மனம் நொந்தனர். நாடு திரும்பிய வுடன் நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்து அவரது சிலையை கொழும்பில் இருந்து ஊர்வ லமாக எடுத்து வந்து நல்லை முருகன் ஆலய முன்றலில் நாவலரால் வாங்கப்பட்ட "அம்மையன் வளவு" என்ற இடத்தில் மணி மண்டபம் அமைத்து பிரதிஷ்டை செய்தனர் .

இந் நிகழ்வையும் இதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளையும் ஒரு வரலாற்று நினைவலையாக 1994ஆம் , 1995ஆம் ஆண்டுகளில் வெளி வந்த " நல்லைக் குமரன் மலரில் " வாசகர்களின் நினைவுக்காக பதிவு செய்துள்ளோம். இதைப்பற்றி பின்னர் கவனிப்போம். (முற்றும்)

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
தகைசால் பேராசிரியர்,
தலைவர், சேர். பொன். இராமநாதன் நம்பிக்கை நிதியம்,
துணைத்தலைவர், நாவலர் பணி மன்றம்.

## காலி சிவன்கோவில் சம்பவத்திற்கு இந்துமாமன்றம் கண்டனம்

பழமை வாய்ந்த புனிதமான இந்து ஆலயமான காலி சிவன் கோயிலிலிருந்து 17 விக்கிரகங்களை கொள்ளையடித்திருக்கும் செயல் கண்டு இந்நாட்டு இந்து மக்கள் அதிர்ச்சியும் சொல்லொணா வேதனையும் அடைந்துள்ளார்கள். இந்து மக்களின் முக்கிய வழிபாட்டு தலத்தில் நடந்துள்ள இத்தகைய அனர்த்தத்தை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளையில் இப்படியான சம்பவம் நடப்பதற்கு யார் பொறுப்பாளர் என்ற கேள்வியும் எழுகிறது. இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதி மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல வழிபாட்டுத் தலங்களுக்கும் உடனடியாக பாதுகாப்பு வழங்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தும் படி அமைச்சரவையிலுள்ள சகல இந்து அமைச்சர்களையும் இந்து சமயத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரைக் கேட்டுக்கொள்வதுடன் இது போன்ற அனர்த் தங்கள் வழிபாட்டுத்தலங்களில் நடக்காத வகையில் உடனடிநடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் இந்துமாமன்றம் வேண்டுகோள் விடுக்கிறது. ஓ

## படையினர்களுக்காகவும் அவர் தம் பிள்ளைகளுக்காகவும் அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றது

(கொழும்பு)

சமூகத்தில் படையினர் தொடர்பில் பிள்ளைகள் மத்தியில் அன்று மாற்றுக் கருத்துகளே நிலவின. தமது எதிர்காலம் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் தெளிவான திட்டம் ஒன்று படையினரிடம் இருக்கவில்லை. இன்று அந்த நிலைமை முழுமையாக மாற்றப்பட்டுள்ளது. படையினருக்காகவும் அவர்களின் பிள்ளைகளுக்காகவும் அரசாங்கம் அதிக பட்சமான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யுத்தம் செய்வதற்கும், துப்பாக்கியை தூக்குவதற்கும் எந்தவொரு முட்டாளுக்கும் முடியும் என்று கூறியவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களின் மன நிலையை மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் சென்னார்.

கொழும்பு , மலே வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பு வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்து விட்டு அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வீரமிக்க படை வீரர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்லதோர் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு இந்த பாதுகாப்பு வித்தியாலயத்தினால் முடியும். பிள்ளைகள் எதிர்காலத்திற்கு முகம் கொடுப்பதற்கு மட்டுமன்றி எதிர்கால உலகத்துடன் இணைந்து பயணிக்கும் வகையில் அவர்களை தயார்படுத்துதல் வேண்டும். வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளுடன் போட்டியிடுவதற்கு அவர்களை ஆரம்பத்தில் இருந்தே தயார்படுத்தல் வேண்டும்.

தாய் நாடு தொடர்பில் பெருமை கொள்ள வேண்டுமாயின் அவர்கள் சர்வதேச மட்டத்தில் புகழ் பெற வேண்டும். அதற்கு பிள்ளைகளை தயார்படுத்தல் வேண்டும்.

கொடூர பயங்கரவாதத்தில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுத்தது மட்டுமன்றி சகல பிள்ளைகளுக்கும் சமதானத்துடன் ஐக்கியமாக வாழ்வதற்காக நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அது மட்டுமன்றி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று படையினரின் பிள்ளைகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தேடி அறிந்து வருகின்றார்.

பிள்ளைகள் பாடல் பாடுகின்ற போது, கதைகளைக் கூறுகின்ற வேளையில், பேசுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும். அவர் களின் வளர்ச்சிக்கு உதவி, ஒத்தாசைகளை வழங்க வேண்டும்.

நாட்டின் மீது அன்பு செலுத்துவது ஒன்று, இனத்தின் மீது அன்பு செலுத்துவது வேறு ஒன்று, தேசத்தின் அன்பு செலுத்துவோரே தாய் நாட்டின் மீது அன்பு செலுத்துவார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-2-4)

## முழுநாட்டின் அபிவிருத்தியை விரும்பும் ஜனாதிபதியை மூவின மக்களும் ஆதரிப்பார்கள்

# அமைச்சர் சரமசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட முழு நாட்டையும் அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் ஆணையை கோரி நிற்கின்றார்.

ஜனாதிபதித்தேர்தலில் அவரை அனைத்து மக்களும் ஆதரிப்பார்கள் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முடிவுக்குக்கொண்டுவந்த ஜனாதிபதி தற்போது நாட்டை அபிவிருத்தி செய்வதற் காக மக்களின் ஆணையை கோரி நிற்கின் றார்.

எனவே ஜனாதிபதிக்கு இந்த நாட்டின் சிங்கள ,தமிழ் மற்றும் முஸ்லிம் உட்பட அனைத்து மக்களும் எந்தவிதமான பேதமின்றி ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களிற்கு இருக்கின்றது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எமது அரசாங்கத்தின் மீது பாரிய நம்பிக்கையை வைத்துள்ளனர். அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகளை வழங்க வேண்டும் என்றும் அவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்பதும் எமது அரசாங்கத்தின் நோக்கமா கும்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட்டு வருகின்றனர். யாரும் எதிர்பார்க்காத விதத்தில் அம் மக்கள் மிக விரைவாக மீழ் குடியேற்றப்படுகின்றனர். அத்துடன் முகாம்களில் உள்ள மக்களுக்கு சுதந்திர நடமாட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வடக்கு கிழக்குப் பகுதியை அபிவிருத்தி செய்வதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. முழு நாட்டையும் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

இதேவேளை தேசிய நல்லிணக்க வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது அனைத்து மக்களும் நம்பிக்கை வைத்துள்ளனர். (ஓ-4)



தெல்லிப்பளை மகாஜானக்கல்லூரியின் 100ஆவது ஆண்டினை முன்னிட்டு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவால் நடத்தப்பட்ட மாணவ மாணவிகளுக்கு மனோசக்தியை வளர்ப்பது எப்படி என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நிகழ்வில் தலைமைதாங்கிய கல்லூரி அதிபர் திருமதி அனந்தசயன் சிவமலர் தலைமையுரையாற்றுவதையும், சுவாமி சித்ரூபானந்தா அமர்ந்திருப்பதையும், பங்கு பற்றிய மாணவ மாணவிகளையும் படத்தில் காணலாம்.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 4 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் 4, விதி எண் 9 ஆகக் கொண்டவர்கள் ராகு, செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்கள். சம உயரமானவர்களாக இருப்பர். ஒரு சிலர் உயரம் குறைந்து காணப்படுவர். கண்கள் சிவந்திருக்கும். தடித்த குரல் கொண்டவர்களாகவும், அது பிறரைப் பயமுறுத்துவதாகவும் இருக்கும். உடல் பலமுள்ளவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் படிக்கவில்லையென்றால் கூட அறிவு நுட்பம், அனுபவமுள்ளவர்களாக இருப்பர். வாய்ப் பேச்சில் வீரர். தைரியமாக எதையும் பேசவோ, செய்யவோ வல்லவர். தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் இருப்பர்.

தம் பேச்சால் பிறர் மனம் புண்படுமே என்று எண்ண மாட்டார்கள். கடுஞ் சொற்களைப் பேசி, பிறரை அடிபணிய வைத்து தம் காரியத்தை முடித்துக் கொள்வதில் வல்லவர்.

இவர்களின் திறமையெல்லாம் தன்னை விட எளியவர்களிடம் தான். வலியர்களைக் கண்டாலோ பெரியவர்களைக் கண்டாலோ மரியாதை கொடுப்பதைப் போல பாவனை காட்டி தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளும் தந்திரசாலிகள்.

தன்னம்பிக்கைக் கொண்டவர்கள். எந்தச் செயலையும் நம்பிக்கையுடன் ஈடுபட்டு வெற்றிகரமாக முடிப்பர். இவர்கள் முரடர்கள். ஆனால் யாரையும் ஏமாற்றமாட்டார்கள். அதைப்போல ஏமாறும் ஏமாளியாகவும் இருக்கமாட்டர்கள். ஆனால் புகழ்ச்சிக்கு மயங்குவர்களாக இருப்பர்.

இவர்கள் பிடிவாதக்காரர்கள். நினைத்ததை எப்படியாவது முடித்துவிடத் துடிப்பர். ஆனால் அதனால் ஏற்படப் போகும் இலாப நஷ்டங்களைப் பற்றி கவலைப்படமாட்டார்கள்.

இவர்களிடம் சூதாட்டம், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் இருக்கும்.

இவர்களுக்கு நண்பர்களும் உண்டு. எதிரிகளும் உண்டு. யாருடனும் ஈடுகொடுக்கும் தனித்திறன் இவர்களிடம் உண்டு. பிறருக்கு நல்ல வழிமுறைகளைக் கூறி அவர்களை கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவர். ஆனால் இவர்கள் பிறர் பேச்சைக் கேட்காது வம்பில் மாட்டிக் கொண்டு தவிக்க நேரும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு மனைவி பொருத்தமானவளாக அமைவது கடினம். புத்திர பாக்கியமும் அவ்வாறே. குடும்பத்தில் சண்டை சச்சரவுகளும், குழப்பங்களும் மிகுந்திருக்கும். அதனால் திருப்திகரமான வாழ்க்கை இருக்காது. உற்றார் உறவினர்களுடன் கூட சுமூகப் போக்கு இருப்பது கடினம். அத்துடன் இவர்கள் காம வேட்கை மிகுந்தவர்களாகவும் இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

இவர்களுக்கு இரும்பு, வண்டி வாகனத் தொடர்பிலான தொழில்களும், அதுவகையில் கமிஷன் ஏஜெண்டுகளாயும் இருக்கக் கூடும். இவர்கள் தரகர்களாக இருந்து பிறரின் காரியங்களை முடித்துக் கொடுப்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ணம் மற்றும் நரம்பு, சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. காய்ச்சல், மூலம், இரத்தக் கொதிப்பு போன்றனவும், மூட்டுவலி, முதுகுவலியும் ஏற்படக்கூடும். இவை தவிர நீரிழிவு நோய்க்கு ஆளாகவும் கூடும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சுக்கிரன், சூரியன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,1,5 அது தொடர்பான எண்களில் யோகமுள்ள பலன் தரும் எண்ணுக்குப் பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 6, 1, 5 தொடர்பான எண் வருமாறு பெயர் அமைத்துக் கொள்ள அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 6,1,5 ஆகியவை தொடர்பான எண்களும், இவை தொடர்பான திகதிகளும் அதிர்ஷ்டமானவை.

ஆனால் சனி, சந்திரன், கேது தொடர்புடைய 8,2,7 ஆகிய எண்களும், திகதிகளும் அதிர்ஷ்டமற்றவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 4க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்.

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

அந்நிலையில் தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள் திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள் கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றண) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோக மற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழிலில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால் நோய் ஏற்பட்டால் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

**இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.**

4 என்பது ராகுவின் ஆதிக்கத்திற்குட்பட்டது. பிறந்த எண் 4 ஆகக் கொண்டவர்கள் ராகுவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 4 எண்களில் எதிலும் பெயர் அமைத்துக் கொள்வது கூட கெடுதலானது.

அந்த எண்கள் யோகப்பலன் அளிக்க வல்லதாகக் கூட இருக்கலாம். இந்த 4 எண்ணை இவர்கள் தவிர்ப்பது நல்லது. இவர்கள் மட்டுமல்ல, வேறு எந்த எண்காரர்களாக இருந்தாலும் சரி இந்த எண்ணை கூடுமானவரை தவிர்க்க நல்லது.

அதைப் போன்று சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட 8 என்ற எண் மிகவும் கெடுபலன்கள் அளிக்கவல்லது. அதனால் 4 எண்ணுடையோர் 8 எண்ணில் பெயர் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பொதுவாக 4 எண்காரர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 தொடர்புடைய எண்களில் யோகப்பலன் அளிக்கவல்ல எண் மிகவும் ஏற்றது. வாழ்க்கையில் படிப்படியான முன்னேற்றத்தை அளிக்கும்.

ஆனால் விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் 6 தொடர்புடைய எண்களை கட்டாயம் தவிர்க்க வேண்டும். அவர்களுக்கு மட்டும் 6 நற்பலன்களைத் தராது.

4 பிறந்த எண்ணாகக் கொண்டவர்களுக்கு விதி எண் 1 முதல் 9 வரை எந்த எண்ணாக இருந்தாலும் அவர்களுக்கு சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1 தொடர்புடைய எண்கள் யோகப்பலனை அளிக்கவல்லவை. இந்த எண்ணை தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம். அனால் 28 என்ற எண்ணை தவிர்க்க வேண்டும்.

விதி எண் 5,8,9 கொண்டவர்கள் புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 தொடர்புடையனவற்றில் யோகப் பலனளிக்கவல்ல எண்களுக்குப் பெயர் அமைத்துக் கொள்ளச் சிறப்பாகும்.

தம் நிறுவனங்களுக்கும் இந்த எண்களுக்கு பெயர் அமைக்க அதிர்ஷ்டமாக இருக்கும். வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். (தொடரும்)

---

# ஐ.தே.க.வின் ஊடகங்களை அடக்கும் கடந்தகால போக்கு இன்னும் மாறவில்லை

## அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.கட்சியின் ஊடகங்களை அடக்கி ஒடுக் கிய கடந்த கால போக்கு இன்னும் மாறவில்லை என்றும் அக்கட்சி தனது சுயரூபத்தை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளது என்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

ஐ.தே.க சம்மேளனத்தில் வைத்து ஊடகவியலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் மூலம் ஐ.தே. க.வின் வலது சாரி சர்வாதிகாரத் தோற்றம் அம்பலமாகியுள்ளது. ஐ.தே.க. சம்மேளனத்திற்கு செய்தி திரட்டச் சென்ற ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஊடகவியலாளர்கள் அறுவர் அண்மையில் ஐ.தே.க. தலைவரின் ஆதரவாளர்களால் மோசமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் கெமரா உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதோடு, வீடியோ ஒளி நாடாக்களும் பறிக்கப்பட்டுள்ளன. மலசல கூடத்தினுள் புகுந்து தப்ப முயன்ற இந்த ஊடகவியலாளர்கள் துரத்தித் துரத்தி தாக்கப்பட்டுள்ளனர். ஊர்மக்கள் தான் இவர்களை காப்பாற்றியுள்ளனர். இவர்களை பாரிய கும்பலொன்றே தாக்கியுள்ளது.

தமது கடமையை நிறைவேற்றச் சென்ற வேளையிலேயே இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். தேர்தல் சமயத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் செய்தி திரட்டுவதற்காக ஊடகவியலாளர்கள் சென்று வருகின்றனர். தமது உயரதிகாரிகளின் பணிப்பின் படியே இவர்கள் செய்தி திரட்டச் சென்றனர். இவர்கள் அரசியல் செய்வதற்காக ஐ.தே.க. மாநாட்டிற்குச் செல்லவில்லை.

இந்த மாநாட்டிற்கு அரசாங்க ஊடகங்களுக்கு அழைப்பு வழங்கவில்லை எனவும் ஊடகவியலாளர்கள் சிலர் தாக்கப்பட்டது தெரியாது எனவும் ஐ.தே.க. செயலாளர் கூறியுள்ளார்.

ஜனநாயகம், ஊடக சுதந்திரம் பற்றி பேசும் ஐ.தே.க. செயலில் அதற்கு மாறாகவே செயற்படுகிறது. கட்சியொன்றின் மாநாட்டில் செய்தி திரட்டச் செல்வதற்கு அனுமதி தேவையில்லை.

ஐ.தே.க.வும், ஜே.வி.பியும் ஊடக சுதந்திரம் குறித்து பேசினாலும் ஊடக சுதந்திரத்திற்கு எதிராகவே செயற்படுகின்றன. கடந்த ஐ.தே.க. ஆட்சியில் பத்திரிகைகள் சீல் வைக்கப்பட்ட போது பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். பலர் தாக்கப்பட்டனர். ஆனால் ஐ.தே.க. தனது கடந்தகால போக்கை இன்னும் மாற்றவில்லை. ஐ.தே.க.வின் இந்த போக்கினால் மிகவும் பயங்கரமான நிலை உருவாகியுள்ளது. (ஓ-4)

---

# மக்களைத் துன்புறுத்தி வாக்குமூலம் பெறுவதற்கு பொலிஸாருக்கு எந்த உரிமையும் கிடையாது

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

மக்கள் மீது தாக்குதல் நடத்தி துன்புறுத்தி வாக்கு மூலங்களை பெறுவதற்கோ அல்லது விசாரணை நடத்துவதற்கோ பொலிஸாருக்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லை. இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு தெளிவுபடுத்தியுள்ளேன் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

இது ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டில் இவ்வாறு தாக்குதல் நடத்தி மக்களிடம் விசாரணை நடத்த முடியாது.

இது தொடர்பில் அண்மையில் பொலிஸ்மா அதிபரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். பொலிஸாருக்கு மனித உரிமைகள் தொடர்பில் பயிற்சி செயலமர்வுகளை நடத்த வேண்டும் என்பதனை தெரிவித்தேன். அதனை அவர் ஏற்றுக் கொண்டார். இது



தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

உலகில் செல்வந்த நாடுகளிலும் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன. நாம் அடிக்கடி ஊடகங்களில் பார்க்கின்றோம். வெளிநாடுகளில் பொலிஸார் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் பார்க்கின்றோம்.

எனவே எமது நாட்டில் மட்டும் பிரச்சினை இருப்பதாக நாம் கருதக்கூடாது என்றாலும் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ஓ-2-4)

மனிதனுடைய எல்லா வியாதிகளுக்கும் மூல காரணம் இரத்தமே

- இஸ்ரேல்

வலம்புரி

## டெங்கு நோயை கட்டுப்படுத்த சிறைத் தண்டனை தேவை

'நுளம்பு' எங்கள் ஒவ்வொருவரின் வீட்டினதும் உடன் பிறப்பாகிவிட்டது. 'எனது இரத்தத்தின் இரத்தமே' என்றார் எம்.ஜி. இராமச்சந்திரன்.

தமிழர்கள் இரத்தத்தின் இரத்தமாக இருக்கிறார்களோ இல்லையோ ஆனால் எங்கள் வீட்டு நுளம்புகள் இரத்தத்தின் இரத்தங்கள்தான். எங்கள் இரத்தங்களே அவற்றின் இனப்பெருக்கத்துக்கு உதவுகின்றன என்ற உண்மை அறியப்பட்டதாலோ என்னவோ நுளம்பை அழிப்பதற்கு எங்கள் மண்ணில் யாருக்கும் விரும்பமில்லை.

நுளம்பு ஒழிப்பில் பொதுமக்களின் பங்களிப்பு எதிர்க்கணியமாகவுள்ளது.

பொறுப்பற்ற அவர்களின் செயலால் நுளம்புகள் பெருக வழிவகுக்கின்றன.

இங்கு பொதுமக்கள் என்பது முழுமக்கள் தொகையும் குறிக்க மாட்டாது.

எத்தனையோ பேர் பொதுநலன் காப்பதில் மிகவும் கருசனை உள்ளவர்களாக இருக்கின்றனர்.

எனினும் ஒரு குறிப்பிட்ட தொகையினர் செய்கின்ற அபத்தமான செயல்களால் நுளம்புகளின் பெருக்கத்தை தடுக்க முடியாமல் உள்ளது.

நுளம்பு பெருக்கத்தை தடுப்பதில் பொது மக்களின் பங்கு எதிர்க்கணியமெனில், சுகாதாரத் திணைக்களத்தின் பணி எவ்வாறு உள்ளதென்ற கேள்வி எழும்.

அந்தக் கேள்விக்கு விடை காணமுற்பட்டால் 'பூச்சியம்' என்பதே முடிபாகும்.

இந்த முடிபை எவரும் எதிர்க்க முற்படக்கூடாது.

ஏனெனில் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த அல்லது முற்றாக ஒழிக்க செயல்வழித் திட்டம் எதனையும் அரசோ அல்லது சுகாதாரத் திணைக்களங்களோ மேற்கொள்ளவில்லை என்பது உண்மை.

நுளம்பை ஒழிப்போம் என்ற பிரசாரம் நுளம்பைக் கட்டுப்படுத்துவதில் ஐந்து வீதமான வகிபங்கை மட்டுமே கொண்டிருக்கும்.

ஆனால் நாம் நூறு வீதமும் பிரசாரத்தையே நம்பியுள்ளோம். இதன் காரணமாகவே எங்கள் திட்டங்கள் வெற்றி தருவதில் தயக்கம் கொண்டுள்ளன.

சிறுவர் உரிமை, மனித உரிமை, டெங்கு ஒழிப்பு, நுளம்பு அழிப்பு, மாற்றுவலுவுள்ளோரை ஊக்குவிப்பு என எல்லாமுமே வாசகங்களாகவும் பதாகைப் பிரசாரமுமாகவே இருக்கின்றன.

இப்பிரசார நெறிமுறையில் மட்டும் தங்கியிராது செயல்வழி நடைமுறைகளையும் அமுல்படுத்த வேண்டும். அப்போதுதான் இலக்கை அடையமுடியும்.

நுளம்புப் பெருக்கம்-'டெங்கு' அபாயம் என்றெல்லாம் எச்சரிக்கை விடும் அதேவேளை, வீதிகளில் குப்பைகளைக் கொட்டுவோர், தண்ணீர் தேங்கி நிற்கும் புட்டிகளை வெளியில் வீசுவோர் இவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கின்றோம்.


இத்தகையவர்களைப் பொலிஸார் கைது செய்து விலங்கு மாட்டி வீதியால் இழுத்துச் சென்று சிறைத் தண்டனை வழங்க வேண்டும்.

அது ஒன்று போதும் யாழ்ப்பாணத்தை சுத்தமான பூமியாக்கவும், நுளம்பை இல்லாதொழிக்கவும் வழிவகுக்கும்.

அடுத்தவனின் கடவையில் குப்பை கொட்டும் நிலைகெட்ட மாந்தரை அடக்காமல், எது செய்யினும் அது வெற்றிதரா! என்பதே எமது ஆணித்தரமான முடிபு.

# பொது நலவாய மாநாட்டை நடத்த இலங்கைக்கு கிடைத்த அங்கீகாரம் மகிந்தவின் ஆட்சிக்கான பரிசு

### வெளியுறவு அமைச்சர் போகொல்லாகம பெருமிதம்



(கொழும்பு)

2013 ஆம் ஆண்டில் பொது நலவாய நாடுகளின் மாநாட்டினை இலங்கையில் நடத்துவதற்கு கிடைத்த அங்கீகாரமானது, கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையில் தலைவிரித்தாடிய பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செலுத்திய சிறந்த தலைமைத்துவத்துக்குக் கிடைத்த பரிசாகும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ட்ரினிடாட் டுபெகோவில் இடம்பெற்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு அங்கு ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கப்படுத்தும் செய்தியாளர் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை முற்பகல் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்;

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முதலாக எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாடு எமது நாட்டில் நடைபெறவுள்ளது. இலங்கை இந்த மாநாட்டை நடத்துவதற்கு பொருத்தமான நாடாக இருப்பதனாலேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நடத்தும்படி முதலில் கோரிக்கை விடுத்த போதிலும் இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெற்றதாகவும் அதனால் அதற்கு தாம் ஆதரவு வழங்க முடியாதெனவும் அவுஸ்திரேலிய மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

எனினும் அதற்கு நாம் பதிலாக நாம் ஒரு போதுமே குடிமக்களுக்கு எதிராக யுத்தத்தினையோ அல்லது இனவன் முறைகளிலோ ஈடுபடவில்லையெனவும் நாம் தொடுத்த போரானது புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிராகவேயன்றி பொதுமக்களுக்கானது அல்ல என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தோம்.

அதன்படி 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலும் 2013ஆம் ஆண்டில் இலங்கையிலும் 2015 ஆம் ஆண் டில் மொரீஷியஸ் நாட்டிலும் நடத்துவதற்கு ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அந்தவகையில் எதிர்வரும் 2013ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் 53 உறுப்பு நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றார்.

இப்போது எமக்குக் கிடைத்த இந்த வெற்றியினை எம்மவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் உள்ள வர்த்தகப் பிரமுகர்கள் இங்கு வந்து வர்த்தகத் துறையில் ஈடுபடவும் புதிய புதிய முதலீடுகளில் இறங்கவும் இங்கு கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-2-4)

## கொழும்பு -மன்னார் பஸ்சேவை இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் மன்னாருக்கும் இடையிலான பஸ் சேவைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. இந்த சேவையில் 10 பஸ்களை ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக செயற்பாட்டு பிரதி முகாமையாளர் லிவின்ஸ் பமுனுகுல ஆராய்ச்சி குறிப்பிட்டார்.

இதற்காக பாதுகாப்பின் அமைச்சின் அனுமதியை பெற்றுள்ளதுடன் இந்த பஸ் வண்டிகள் புறப்படும் நேர அட்டவணைகள் நேற்றைய தினம் தயாரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வாரம் கிளிநொச்சியில் இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் டிப்போ ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதி பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் 12 பஸ் வண்டிகளை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் மாங்குளத்தில் இருந்து 22 கிலோமீற்றர் மேற்கில் உள்ள மல்லாவி பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து 4 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-2-9)

## எட்டு நாளே ஆன சிசு விற்பனை சந்தேக நபர்கள் கைதாகினர்

(கொழும்பு)

பிறந்து எட்டு நாளே ஆன சிசுவொன்றை விற்ற சந்தேகத்தின் பேரில் கலகெதர பகுதியில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிசுவை வாங்கியவர்கள் என கூறப்படும் இருவருடன் பெண் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தமக்கு கிடைத்த தகவல்களுக்கமைய கலகெதர பம்பரகம் முல்ல சந்தியில் இரகசிய இடமொன்றில் மேற் கொண்ட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சிசுவை விற்பனை செய்ததால் கிடைத்த 30 ஆயிரம் ரூபாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிசுவிற்கு கலகெதர ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதோடு இந்த சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ஓ-9)

## சட்டவிரோதமான சங்கு பொதிகள் சுங்க திணைக்களத்தால் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந்தியாவுக்கு கொண்டு செல்லவிருந்த 20 தொன் சங்குகள் அடங்கிய கொள்கலன் ஒன்றை சுங்கத் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த கொள்கலனில் சங்குகளுடன் 41 ஆயிரத்து600 பொதிகள் இருந்ததாக சுங்கத் திணைக்களத்தின் பிரதம அதிகாரி சமந்த குணசேகர தெரிவித்தார். இவற்றின் பெறுமதி 36 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

70 மில்லி மீற்றருக்கும் குறைவான அளவைக் கொண்ட சங்குகளை வைத்திருப்பது, கொள்வனவு செய்வது, விற்பனை செய்வது என்பன சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியதோடு கைப்பற்றப்பட்ட சங்குகளின் 99 வீதமானவை இந்தச் சட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய வத்தளைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை கண்டு பிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமந்த குணசேகர மேலும் தெரிவித்தார். (ஓ-9)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### கல்வியும் சமுதாயமும்

பாமரர்களாகிய பொது மக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தையும் ,சிங்கம் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி அதைக் கல்வி என்று சொல்வது பொருத்தமா? எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும் படி செய்கிறதோ அது தான் உண்மையான கல்வியாகும்.

கல்வி என்பது உன்னுடைய மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணமாகமல் உனக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

வாழ்க்கையை உருவாக்கக்கூடிய மனிதனை மனிதனாக்கக் கூடிய நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்களைக் கிரகித்து அவற்றை நாம் நம்முடையவையாக்கிக்கொள்ள வேண்டும்.

# யாழ். குடாநாட்டில் கௌபீ பயிர்ச் செய்கை

யாழ்குடா நாட்டில் வாழும் 6 இலட்சம் மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு விலங்குப்புரதத்திற்குப் பதிலாக தாவரப்புரதத்தினை அதிகமாகக் கொண்ட அவரையினப்பயிர்கள் சிறந்ததாகும். ஒரு மனிதன் 65கிராம் புரதத்தினை ஒரு நாளிற்கு உண்ண வேண்டிய தேவை உள்ளது. இதற்காக விலங்குப் புரதங்களும், தாவரப்புரதங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விலங்குப்புரதம் எல்லா மக்களாலும் நுகராத தன்மையும், விலை உயர்வானதாகவும், கலாசாரவிழுமியங்கள் காரணமாக சில தினங்களில் நுகர முடியாமலும் இருக்கின்றது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தாவரப் புரத உணவுகளை உட்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் கௌபீ செய்கைக்கு சாதகமான காலநிலை நிலவுகின்றது. எனினும் கடந்த 2008/2009 காலபோகத்தில் 270 ஏக்கர் விஸ்தீரணத்திலும், 2008 சிறுபோகத்தில் 58ஏக்கர் விஸ்தீரணத்திலும் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை மேலும் அதிகரிப்பதற்காக கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் இப் பயிரை உற்பத்தி செய்யக்கூடிய கிராமங்கள் இனங்காணப்பட்டு 2009/2010 பெரும்போகத்தில் 367.5ஏக்கர் விஸ்தீரணத்தில் பயிர்ச செய்கை மேற்கொள்வதற்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 1470 பயனாளிகள் 07 பிரதேசசெயலர் பிரிவு களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு ஒரு பயனாளி 1000 சதுரமீற்றரில் கௌபீ பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நான்கு கிலோ பொம்பே அல்லது வருணி வர்க்க விதை, அசேதனபசளை, அறுவடை செய்யப்படும் நெற்றுக்களை சீரானமுறையில் உலர்த்தி, விதைகளை பிரித்தெடுப்பதற்கு தேவைப்படும் 24'x10' பரிமாணமுள்ள உரப்பையாலான ஒரு படங்கு என்பன வழங்கப்பட்டுவருகின்றன.

**வழங்கப்படவுள்ள உள்ளீடுகள்**

| பி.செ.பி | வி.போ பிரிவு | பயனாளிகள் எண்ணிக்கை | பயிர்ச் செய்கை விஸ்தீரணம் (ஏக்கர்) | மொத்த விதை அளவு (கி.கி) | வழங்கப்படவுள்ள இரசாயனப்பசளை(கி.கி) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | யூரியா | ரி.எஸ்.பி | எம்.ஓ.பி |
| ஊர்காவற்றுறை | வேலணை | 30 | 7.5 | 120 | 150 | 165 | 120 |
| சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் | 210 | 52.5 | 840 | 1207.5 | 1260 | 945 |
| சங்கானை | சங்கானை | 110 | 27.5 | 440 | 660 | 715 | 550 |
| உடுவில் | உடுவில் | 200 | 50 | 800 | 1000 | 1200 | 1000 |
| தெல்லிப்பளை | தெல்லிப்பளை | 270 | 67.5 | 1080 | 1485 | 1620 | 1350 |
| சாவகச்சேரி | சாவகச்சேரி | 415 | 103.75 | 1660 | 2178.75 | 2490 | 2075 |
| | கைதடி | 125 | 31.25 | 500 | 656.25 | 750 | 625 |
| பருத்தித்துறை | புலோலி | 110 | 27.5 | 440 | 467.5 | 660 | 550 |
| மொத்தம் | 1470 | 367.5 | 5880 | 7805 | 8860 | 7215 | |

திட்டத்தில் வழங்கப்படும் உள்ளீடுகளும் மாவட்டத்திலுள்ள பயிர்ச்செய்கை வளங்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி உச்சப்பயன்பாட்டைப் பெறுவதற்கு கௌபீ பயிர்ச்செய்கையில் கடைப்பிடிக்ககூடிய தொழில்நுட்ப விடயங்கள் இக்கட்டுரையில தொகுக்கப்பட்டுள்ளது.

### காலநிலையும் மண்ணும

கௌபீ வறட்சியான காலநிலைக்கு உகந்த பயிராகும். இது மணல்மண், இருவாட்டி மண் போன்ற பல்வேறுபட்ட மண் வகைகளிலும் வளரும் இயல்பினைக் கொணடது. எனினும் நன்கு நீர்வடிப்புள்ள இருவாட்டி மண்ணே சிறந்தது. உவர் மணணிற்கு இதன் வளர்ச்சி குறைவாக இருககும்.

### பயிரிடும் காலம்

பெரும்போகத்தில் நவம்பர் மாத முதலாம் இரண்டாம் வாரங்களினுள் மேட்டு நிலங்களில் நடுகையை மேற்கொள்ள வேணடும். இடைப் போகத்தில் வயல் நிலங்களில் நெல் அறுவடையின் பின் ஜனவரி மாத .இறுதிப் பகுதியிலிருந்து பெப்ரவரி மாத நடுப்பகுதிவரை விதைத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### இனங்கள்

வயது குறைந்த, அதிகளவு விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய, இலகுவில் சந்தைப்படுத்தக் கூடிய வகையில்

**செய்கை மேற்கொள்ளக் கூடிய வர்க்கங்களும் அதன் இயல்புகளும்**

| இனம் | வயது | விதைநிறம் | விளைவு கி.கி/1000m² |
|---|---|---|---|
| பொம்பே | 90 நாள் | கபிலம் | 145 |
| தவள | 70 நாள் | பழுப்பு வெள்ளை | 160 |
| விஜய | 70 நாள் | மென் கபிலம் | 160 |
| வருணி | 70 நாள் | செங் கபிலம் | 165 |
| எம்.ஐ.35 | 80 நாள் | பழுப்பு வெள்ளை | 135 |

இனங்களை தெரிவுசெய்து விதைத்தல் வேண்டும்.

### பயிராக்கவியல் செயல் முறைகள்

**விதைத்தேவை**

வரிசை விதைப்பு - 3.5 கிலோ கிராம் / 1000 சதுர மீற்றர்

வீச்சு விதைப்பு - 4 – 4.5 கிலோ கிராம் / 1000 சதுர மீற்றர்

**விதைப் பரிகரிப்பு**

போஞ்சி ஈ தாக்கத்திலிருந்து நாற்றுப் பருவப் பயிரைப் பாதுகாக்க ஒரு கிலோ விதையை 10கிராம் காபோசல்பானில் (மாரசல்) பரிகரித்து விதைப்பினை மேற்கொள்ள வேண்டும். இதனால் 2.3 வாரங்களிற்கு இப் பூச்சித்தாக்கத்திலிருந்து பயிரைப் பாதுகாப்புடன் அக் காலப்பகுதிக்குள் இப் பூச்சித்தாக்கத்திற்கு கிருமி நாசினி விசிறாமலேயே கௌபீ பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

- **நடுகையும் நடுகை இடை வெளியும்**

விதை முளைக்க போதுமான ஈரம் மணணில் உள்ள போது நடுகையை மேற்கொள்ளவும். இரண்டு பயிர்களிடையே இலை நுனிகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருத்தல் தகுந்த பயிரடர்த்தி ஆகும். பயிரடர்த்தி அதிகரித்தால் கொடி விடும் தன்மை அதிகரித்து பூத்தல், காய்த்தல் குறைவடையும்.

விதை முளைத்து வரும் போது பறவைகள் உண்பதனால் தகுந்த பயிரடர்த்தி பேணல் கடினமாகவுள்ளது. எனவே இப் பயிரடர்த்தியைப் பேண வரிசை விதைபபாயின் 45X5Cm நடுகை இடைவெளியில நடுகை செய்தல் வேண்டும். வீச்சு விதைப்பாயின் 1000சதுர மீற்றருக்கு விதையளவை 4.5 கிலோ ஆக அதிகரித்து நடுகையை மேற்கொள்ள வேண்டும். பயிர் முளைத்து 2-3 வாரங்களின் பின் 45X15Cm பயிரிடைவெளியில் வீரியமற்ற தாவரங்களை ஐதாக்கி தகுந்த பயிரடர்த்தி பேணப்படுவதன் மூலம் உயர் விளைவைப் பெறலாம்.

வரிசை விதைப்பால் களைகட்டல்,நீர்ப்பாசனம் போன்ற பயிராக்கவியல் செயல்முறைகள் இலகுவாக்கப்படும். அத்துடன் பயிர் கொடிவிடும் தன்மையைக் குறைத்துக்கொள்ளலாம்.

**அடிக்கட்டுப் பசளை (1/4 ஏக்கர்)**

யூரியா 3.5 கிலோ ரி.எஸ்.பி. 10 கிலோ, பொற்றாஸ் 7.5 கிலோ

**மேற்கட்டுப்பசளை (1/4 ஏக்கர்)**

யூரியா 3 கிலோ

**அறுவடை**


**பசளைப் பிரயோகம்**

சிறந்த விளைவைப் பெறுவதற்கு 1000 சதுர மீற்றருக்கு (1/4 ஏக்கர்) அடிக்கட்டுப் பசளையாக

யூரியா 3.5 கிலோ, ரி.எஸ்.பி.10 கிலோ பொற்றாஸ் 7.5 கிலோ

மூன்று பசளைகளையும் நன்கு கலக்கவும். விதைகளை விதைப்பதற்கு முன்பு கௌபீயை நடவேண்டிய விரிசையில்

**கௌபீயின் வளர்ச்சிப் பருவங்கள்**




அடிக்கட்டுப்பசளையைத் தூவி கூரான தடியால் கீறி மண்ணுடன் நன்கு கலந்து விட வேண்டும். பயிர் பூக்க ஆரம்பிக்கும் போது (30-35ம் நாள்) 03 கிலோ யூரியா மேற கட்டுப்பசளையாக பாவிக்க வேண்டும்.

### களைக்கட்டுப்பாடு

நடுகை செய்து 5 கிழமைகளிற்குள் பயிரகளிடையே காணப்படும் களைகளை அகற்ற வேண்டும். அதன் பின் பயிர வளர்ந்து நிலத்தை மூடுவதால் களைகளின் வளர்ச்சி மிகக் குறைவு.

வரிசை விதைப்பில் வரிசை களிடையே உள்ள களைகளை மண் வெட்டி, களை கட்டும் கருவி என்பவற்றின் மூலம் அகற்றி குறைந்த செலவுடன் முகா மைத்துவப்படுத்தலாம்.

### நீர் முகாமைத்துவம்

பயிரின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் 4,5 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்ச வேண்டும். 30 நாட்களின் பின் கிழ மைக்கு ஒரு நீர்ப்பாசனம் கொடுப்பின் போதுமானதாகும். நிலத்தின் சரிவுக்கு குறுக்கே கான்களை அமைப்பதன் மூலம் மேலதிக நீர் வழிந்தோட வாய்ப்பு ஏற்ப டுத்தப்பட வேண்டும்.

அதிகளவு நீர் மற்றும் நைதரசன் பசளை கிடைக்கும் போது பயிர் கொழுந்து விடடுப் படர ஆரம்பிக்கும். இதனால் இவை பூத்துக்காய்க்க காலம் செல்லும். எனவே இந்நிலையில் நீர்ப்பாசனத்தைக் குறைதது கொழுந்துகளை கத்தரித்து அகற்றல் வேண்டும். பூக்கும் போதும், காய் நிரம்பும் போதும் பயிருக்கு நீர்ப் பற்றாக்குறை ஏற்படக்கூடாது.

### பூச்சி, நோய் முகாமைத்துவம்

மரக்கறிச் செய்கையுடன் ஒப்பிடுகையில் கௌபீப் பயிர்ச் செய்கையில் பூச்சி, நோய்த்தாக்கம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

**போஞ்சி ஈ:**

அவரைச்செய்கையில் பயிரின் ஆரம்ப வளர்ச்சியில் பிரதான பீடையாகக் காணப்படுவது போஞ்சி ஈ ஆகும். பயிரின் இரண்டு இலைப்பருவத்தில் இலையின் மேற்பகுதியில் முட்டை இடும். இம்முட்டை பொரிதது குடம்பியானதும் இலை நரம்பினூடாக மண்மட்டத்திலுள்ள காறைப்பகுதியில் தங்கியிருந்து பயிரின் இழையங்களை உணவாக உட்கொள்கின்றது. இதனால் மண்மட்டத்தில் புடைப்புகள் தோன்றி ஈற்றில் நாற்றுக்கள் இறக்க நேரிடுகின்றது. எனவே பயிரின் இரண்டு இலைப்பருவத்தில் அட்டவணையில் காட்டப்பட்ட பூச்சி நாசினிகளில் ஒன்றை விசிறி முகாமைத்துவப்படுத்தலாம். வரிசை விதைப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் போது மண் அணைத்தலின் மூலம் தாக்கத்திற்குள்ளான பயிரகளின் இறப்பு வீதத்தை குறைக்கலாம்.

### காய்துளைப்பான்

பூக்கள் இளம் காய்களில் கபில்பச்சை, பச்சை நிறமான குடம்பிகள் உணவினை உட கொள்ளும். பூக்களில் துளைகள் காணப் படும். இதனால் பூக்கள் உதிர்வதுடன் காய்களும் சேதமுறும். பூத்தல், பிஞ்சு உருவாதல், இளம்காய்ப் பருவங்களில் அட்டவணையில் காட்டப்பட்ட பூச்சி நாசினிகளில் ஒன்றை விசிறுவதன் மூலம் இப் பீடையை முகாமைத்துவம் செய்யலாம்.

### பனிப்பூச்சி

கறுப்பு நிறமான சிறிய பூச்சிகள் பூக்களினுள் இருந்து மகரந்த மணிகளின் சாற்றை உறிஞ்சுவதனால் காய்கள் உருவாகமாடடாது. பயிர் பூக்கும் நேரத்தில் அட்டவணையில் காட்டப்பட்ட பூச்சி நாசினிகளில் ஒன்றை விசிறுவதன் மூலம் இப்பீடையை முகாமைத்துவம் செய்யலாம்.

### துடுப்புக்கால் பூச்சி

இப்பூச்சியானது இளம் காய்ப்பருவத்தில் காய்களிலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கும். இதனால் உருவாகும் காய்கள பூரணமாக நிரம்பாது விதைகள் சப்பியாகக் காணப்படும். அட்டவணையில் காட்டப்பட்ட பூச்சி நாசினிகளில் ஒன்றை விசிறுவதன் மூலம் இப்பீடையை முகாமைத்துவம் செய்யலாம்.

### அறுவடை:-

காய்கள் முதிர்ந்ததும் காலம் தாழ்த்தாது அறுவடை செய்தல் அவசியம். காயகள் வைக்கோல் நிறமாக மாற்றமடையும் போது அறுவடை செய்தல் வேண்டும்.

சூரிய ஒளியில் படங்கில் காயவிடப்பட்ட காய்களைத் தடியால் அடித்து விதைகளை வேறாக்கவும். பின்பு துாயதாக்கி நன்கு காய விட்டு களஞ்சியப்படுத்தலாம். அறுவடையில் முற்றாத காய்கள் இருப்பின் விதையின் தரத்தைப் பாதிக்கும்.

### சேமித்தல்:-

பிரித்தெடுக்கப்பட்ட விதைகளை படங்கில் காயவிடுதல் வேண்டும். காய்ந்த விதைகளை கடிக்கும்போது மென்மையாக இல்லாது உடையும் நிலையில்

காணப்படின் சேமித்தலை மேற்கொள்ளலாம். இந்நிலை விதைகளை சேமித்தலுக்கு உகந்த 10% ஈரப்பதன் உள்ள நிலை ஆகும்.

சேமிப்பின் போது அவரை வண்டுகள் விதைகளைத்தாக்கும். எனவே விதைகளைக் காயவைத்து துளசிஇலை, வேப்பிலை என்பவற்றை இட்டு காற்றுப் புகாத கொள்கலன்களில் சேமிப்பதாலும், வாரம் ஒரு முறை காயவைத்து சேமிப்பதாலும் அவரை வண்டுத்தாக்கத்தைக் குறைக்க முடியும். 1 கிலோ விதையினை பிளாஸ்ரிக் பாத்திரத்தில் பரவிவிடல் வேண்டும். 5மி.லீற்றர் ஆமணக்கு எண்ணெயினை விதை மேற்பரப்புடன் தொடுகையுறுமாறு நன்கு கலந்து சேமித்தல் வேண்டும்.இவ்வாறு சேமிப்பதன் மூலமும் அவரை வண்டுகளின் தாக்கத்தைக் குறைக்க முடியும்

எனவே இப்பெரும்போகத்தில் கௌபீப் பயிர்ச்செய்கை நடவடிக்கையினை சிறப்பான முறையில் மேற்கொண்டு நிலைபேறான விவசாயத்திற்கு வழிவகுப்போம்.

திருமதி லதா ஜனகன்
பாடவிதான உத்தியோகத்தர் (பழப்பயிர்)
திருமதி. ப. மீனலோஜினி
விவசாயப் போதனாசிரியர்
யாழ்ப்பாணம்

# பிரதமர் பதவி தனக்கு கிடைக்குமென்றே எஸ்.பி.திஸநாயக்கா கட்சி தாவினார்

## ரேணுகா ஹேரத் கிண்டல்

(கொழும்பு)

**பிரதமர் பதவியை ஏதிர்பார்த்து அரச தரப்புக்குத் தாவியிருக்கும் எஸ்.பி. திஸநாயக்கா கட்சிக்கும் நாட்டுக்கும் துரோகம் இழைத்து விட்டார்.**

**மக்கள், நாடு குறித்த சிந்தனை இருந்திருந்தால் இவ்வாறான அற்ப தீர்மானங்களை அவர் எடுத்திருக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

கை சின்னத்தை தொலைத்து விட்டு அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ள சுதந்திரக் கட்சியினருக்கும் அவர்கள் சார்ந்த அரச தரப்பினர்களுக்கும் யானைச் சின்னம் குறித்துப் பேசுவதற்கு எந்தவிதமான அருகதையும் இல்லை என்றும் அக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அக் கட்சியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. ரேணுகா ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

எஸ்.பி.திஸநாயக்காவுக்குக் கட்சியின் உயரிய பதவிகளுள் ஒன்றான தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் தற்போது எடுத்திருக்கும் தீர்மானமானது அற்பமானது.

கட்சித் தாவல்களில் புகழ்பெற்ற முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல்லின் சாதனையை இவர் முறியடித்து விடுவார் போல் தெரிகின்றது.

அவருடைய தர்க்கங்கள் எதுவாக இருந்தாலும் கட்சியின் செயற்குழு எடுக்கின்ற தீர்மானங்களுக்குக் கட்டுப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏகோபித்த தீர்மானத்தை மாற்றியமைக்க முடியாது. எதிர்க்கவும் முடியாது. ஜெனரல் சரத் பொன்சேகா பொது வேட்பாளராகவே நிறுத்தப்பட்டுள்ளார். இந்த நாட்டிலிருந்து குடும்ப சர்வாதிகாரத்தை விரட்டியடிப்பதற்கும் அதேபோல் மக்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும் தீர்மானித்தே ஜெனரல் பொன் சேகாவை ஜனாதிபதியாக்குவது என்ற தீர்மானத்திற்குக் கட்சி வந்தது.

நடைபெறவிருக்கும் தேர்தல் ஆனது மக்களின் கருத்துக் கணிப்பேயன்றி அது ஜனாதிபதித் தேர்தல் அல்ல என்றே கூற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னம் குறித்து சுதந்திரக் கட்சியினர் பெரிதாக அலட்டிக் கொள்கின்றனர்.

பதவி மோகம் பிடித்து எம்மில் இருந்து பிரிந்து சென்றவர்களும் கூட இது குறித்துப் பேசுகின்றனர். சுதந்திரக் கட்சியினர் முதலில் கையை இழந்தனர். பின்னர் நாற்காலியையும் இழந்து இப்போது வெற்றிலையில் நிற்கின்றனர்.

இன்னும் சிறிது நாள்களில் வெற்றிலையையும் இழந்து காலில் விழுந்து கிடக்கப் போகின்றனர். இவ்வாறு தங்கள் சின்னத்தைத் தொலைத்து விட்டவர்கள் இன்று வெட்கமில்லாது எம்மைப்பற்றி விமர்சிக்கின்றனர் என்றார். (ந-5)

# யாழ்.போதனா வைத்தியசாலை இப்படி நிர்மாணிக்கப்படுமாம்



ஜெய்கா (JICA) யப்பான் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதியின் முகப்புத் தோற்ற வரைபடத்தை ஒப்பந்த காரரான சர்வதேச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் வழங்கியுள்ளது. அவ் வரைபடத்தையே படத்தில் காண்கின்றீர்கள்.

## ஜெனரல் சரத் பொன்சேகாவின்

# இணைப் பேச்சாளர்களாக மங்களவும் அநுரகுமாரவும்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் இணை பேச்சாளர்களாக மங்கள சமரவீர மற்றும் அநுரகுமார திஸநாயக்கா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜெனரல் சரத் பொன் சேகாவின் தேர்தல் இணைப்பு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணியின் இணைத் தலைவரான மங்கள சமரவீர மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்கா ஆகியோர் பொன்சேகாவின் இணைப் பேச்சாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஊடக மற்றும் பிரசாரப் பணிகளை ஒழுங்கு செய்வதை இவர்கள் இருவரும் மேற்பார்வை செய்வார்கள். இதற்காகச் சிறப்பு ஊடகத்துறைப் பிரிவு அலுவலகம் கொழும்பு றோயல் கல்லூரிக்கு முன்பாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மங்கள சமரவீரவும் விமல் வீரவன்சவும் மகிந்த ராஜபக்ஷவின் இணைப் பேச்சாளர்களாகச் செயற்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# விமானத் தளம் மீதான தாக்குதல் சந்தேக நபர் புனர்வாழ்வு முகாமுக்கு

(கொழும்பு)

அநுராதபுரம் விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் நடத்திய தாக்குதலுக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்த நபர் மீது நிரூபிக்கத்தக்க போதிய சாட்சி, ஆதாரங்களைப் பொலிஸார் சமர்ப்பிக்காததால் அவரை வவுனியா புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் நீதிமன்றமே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபரான முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புச் சுற்றுப் பாதையைச் சேர்ந்த வரதராஜா எனப்படும் ராதா என்பவருக்கே நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதேவேளை நீதிமன்றத்தில் சந்தேக நபரை முன்னிலைப்படுத்திய பொலிஸார், குற்றம் சுமத்தப்பட்டவர் தொடர்பில் நிரூபிக்கக் கூடிய சாட்சிகள், ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியவில்லை எனத் தெரிவித்தமையினால் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ந-5)

# ஆங்கில தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் ஆங்கில தின விழா நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் தொடக்க உரையைப் பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் ஆற்றுவார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-5)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA)
(MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்கள்
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Diploma in English 100 % வெற்றி
100 % பயிற்சி Advanced Diploma in English
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London)
காலம் 6 மாதங்கள்
Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Access Programming
(Foundation Degree Programme)
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
Foundation Diploma In Nursing (Health & Social Care)
Topup degree in UK / London
காலம் 6 மாதங்கள்
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma in Management காலம் 6 மாதங்கள்
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499 0777222422/ 0714299935



ஸ்டோர் வாடகைக்கு உண்டு
கொக்குவில், பிறவுண் வீதியில் பாரிய பார ஊர்திகள் சென்று வரக் கூடிய வசதியுடன் கூடிய ஸ்டோர் வாடகைக்கு உண்டு. விஸ்தீரணம் சுமார் 4000 சதுர அடி.
T. நடராசா
தொலைபேசி : 0771611815



யாழ் நகரில்.....
2010 CALENDERS
எங்கும் கிடைத்திடாத வகையில்
பல வர்ணக் கலண்டர்களை ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
T.P: 021 2229285
15/2. முருகேசர் லேன். நல்லூர். முத்திரைச்சந்தி.

## ஜனாதிபதி...

கல்லூரியில் நேற்று சிங்கள மாணவர்களின் கலை நிகழ்வு ஒத்திகைகள் இடம் பெற்றுள் ளது. அத்துடன் வேம்படி மகளிர் கல்லூரிக் குள் பொலிஸ் பிரிவு ஒன்று பாதுகாப்ப நட வடிக் கைகளுக்காக நிறுவப்பட்டு இருந்ததா கவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## அவசரகாலச்...

பின் 21 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதே வேளை இந்த வாக்கெடுப்பின் போது, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜே.வி.பி. என் பன சபைக்கு சமுகமளிக்கவில்லை. (ந)

## அரசியல் கைதி...

இதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் அநு ராதபுரம் சிறைச்சாலைகளிலுள்ள அரசியல் கைதிகளும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

எனினும் இத் தகவலை மறுத்துள்ள சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் ஹெனத் பெர்னாண்டோ வவுனியாவில் மாத் திரமே போராட்டம் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் வவுனியா மனித உரிமைகள் அலுவலகத்திற்கு முன்னால் நாளை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உற வினர்கள் தெரிவித்துள்ளனர். (ந-5,14)

## பூநகரி கரச்சி...

பள்ளி, பளை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள் குடியமர்த்தப்படாத நிலையில் வவுனியா முகாம்களில் வாக்களிப்பு நிலையங்கள் நிறு வுவதற்கு ஆலோசித்து வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட வன்னிமக்கள் தமது சொந்த இடங்களில் வாக்களிக்க விரும்பின் இலவச போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட தேர் தல் தொகுதியில் யாழ்ப்பாணத்தில் 630848 பேரும் கிளிநொச்சியில் 90511 பேரும் ஜனா திபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி உடை யவராக உள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர் தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் மேலும் தெரி வித்துள்ளார். (ந-7)

## தபால் மூலம்...

திணைக்களத்தில் தினமும் அதிகளவிலான இராணுவத்தினர்வாக்காளர் பட்டியலை பார் வையிட்டு பதிவுகளை மேற்கொண்டு வரு வதை காணக் கூடியதாகவுள்ளது. (ந-7)

# அதாவுல்லாவை விசாரிக்க உயர் நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

வெள்ளை வானில் மௌலவி ஒருவரை கடத்திய சம்பவத்தின் பின்னணியில் அமைச் சர் அதாவுல்லா ஈடுபட்டுள்ளதாக தாக்கல் செய்யப் பட்ட மனு தொடர்பாக புலன் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவிற்கு எதிராக தாக் கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை ஆராய்ந்த போதே உயர் நீதிமன் றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள் ளது.

அக்கரைப்பற்று ஜும்மா முஸ்லிம் பள்ளி வாசல் மௌலவி அப்துல் முகமட் ஹனிபா என் பவர் தாக்கல் செய்திருந்த இந்த மனு வில் அக் கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அமைச்சர் ஏ.எல்.எம். அதா வுல்லா, பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதி களா கக் குறிப்பிடப்பட் டுள்ளனர்.

அக்கரைப்பற்றில் ஜும்மா பள்ளிவாசல் மௌ லவி வெள்ளை வானில் கடந்த செப்ரம் பர் மாதம் 4ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தில் அமைச்சர் அதாவுல்லா நேரடியாகப்பங்கு கொண் டிருந்ததாக உயர் நீதி மன்றத்திற்கு ஜனாதிபதி சட் டத்தரணி ஜயந்த விக்கிரமரட்ண நேற்று தெரி வித் தார். (ந-14)

## நவம்பர் 23...

பின் 17-வது திருத்தச் சட்டத்தின் 104 ஆ (4), 104 (ஓ) ஆகிய உறுப்புரைகளின் ஏற்பாடு களின் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக் களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிய திச் சபைகளின் தலைவர்க ளின் கவனம் ஈர்க் கப்படுகின்றது.

இந்த ஏற்பாடுகளில் பிரகாரம் அரச, கூட் டுத்தாபனம், நியதிச் சபை நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு என் பன தேர்தல் காலங்களில் நிறுத்தி வைக்கப் படுவது அவசியமாகும்.

தேர்தல் காலம் என்பது பிரகடனம் வெளி யிடப்பட்ட திகதிக்கும், தேர்தல் முடிபுகள் அறி விக்கப்படும் தினத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியாகும்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்து இக் காலப் பகுதியானது 23.11.2009 தொடக்கம் முடிபுகள் அறிவிக்கப்படும் தினம் வரை ஆன தாகும்.

மேற்குறிப்பிட்ட திகதியிலே அல்லது அதற் குப் பின்னர் இடம்பெறும் நியமனங்கள், பத வியுயர்வுகள், இடமாற்றங்கள்யாவும் செல்லு படியற்றதாக்கப்படும். (ந-5)

## திருமலையில் இந்து ஆலய...

கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

திருகோணமலையில் வரலாற்றுப் பழை மை வாய்ந்த இந்து ஆலயங்கள் திட்டமிட்ட முறையில் இடிக்கப்படுகின்றன. மூதூர் சிவன் கோவிலில் சிவலிங்கம் புரட்டி எடுக்கப்பட் டுள்ளது.

பௌத்த நாடு என்ற அடிப்படையில் அங்கு ஆட்சி நடத்தப்பட்டு ஏனைய மதங் கள் புறக்கணிக்கப்படுகின்றன. திருகோண மலையில் இது சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதற்காகவே மேற்கொள்ளப்படுகின் றன.

எனவே திருகோணமலையின் மேற் கொள்ளப்படும் இராணுவ மயமாக்கல் நட வடிக்கைகளை முதலில் நிறுத்தி அதியுயர் பாதுகாப்பு வலயமும் அகற்றப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வலியுறுத் தினார். (ந-5)

## வேட்பாளர்களைச் சந்திக்கவே...

செயலாளருமான றொபேட் ஓ பிளேக்கி ன் முக் கிய நோக்கம் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்திப்பதாகும்.

நேற்று இலங்கைக்கு வந்துள்ள பிளேக் இருநாட்கள் தங்கியிருப்பார். அவர் இன்று புதன் கிழமை ஐக்கிய தேசிய முன்னணி நாடாளு மன்ற உறுப்பினர்களை சந்திப்பதுடன் வவுனி யாவில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாமிற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய தேசியமுன்னணியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜெய சூரியா, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், மங் கள சமரவீர, ரவி கருணாநாயக்க ஆகியோர் பிளேக்கை சந்தித்து கலந்துரையாட வுள்ள தாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பத வியில் இருந்து விலகிச்சென்ற பின்னர் பிளேக் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் விஜ யம் இதுவாகும். (ந-5)

## யாழ். மாவட்டத்தில் 'டெங்கு' தீவிரம்...

மிகவும் அவசியமானது.

எனவே இந்நோயினைக் கட்டுப்படுத்த பின்வரும் டெங்குத் தடுப்பு நடவடிக்கை களில் ஒத்துழைப்பு வழங்குமாறு அனை வரையும் அவர் கேட்டுள்ளார்.

**டெங்குத்தடுப்பு நடவடிக்கைகள்**

1. சகல வைத்திய சாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் சுத்திகரிப்பு பணி இடம்பெற வேண்டும். இதற்கென சிரம தானங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு-வைத்தியசாலை பொறுப்பதிகாரி கள்.)

2. சகல திணைக்கள / நிறுவன வளவு களிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப் புப்பணி இடம்பெறவேண்டும். (பொறுப்பு- திணைக்கள / நிறுவனத்தலைவர்கள்.)

3. பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கிநிற்கும் இடங்களையும் துப்புரவு செய்யவேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலாளர் கள்.)

4. திண்மக் கழிவுகள் கிரமமாக உரிய முறையில் அகற்றப்படவேண்டும். (பொறுப்பு- உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்.)

5. பாடசாலைகளில் சிரமதான அடிப் படையில் சுத்திகரிப்புப் பணிகள் மேற் கொள் ளப்பட வேண்டும். (பொறுப்பு-பாடசாலை அதி பர்கள்.)

6. ஒவ்வொரு வீட்டிலும் நுளப்பு பெருகக் கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்தி கரிப்புப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். (பொறுப்பு-வீட்டு உரிமையாளர்கள் / குடியி ருப்பாளர்கள்.)

7. டெங்கு நோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். விழிப்புணர்வு கருத்தரங்குகள் / துண்டுபிரசுரங்கள் / கட்டுரைகள் (பொறுப்பு- உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகா தார வைத்திய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள்.)

8. பொது சுகாதார பரிசோதகர்கள் / குடும்ப நல உத்தியோகத்தர்கள் தத்தமது பிரிவில் உள்ள வீடுகளுக்கு வீட்டுத்தரிசிப்பிற்கு செல் லும் போது நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி அழிக்க ஆலோசனை வழங்க வேண்டும். (பொறுப்பு- பொது சுகாதார பரிசோத கர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள்.)

9. யாழ். மாவட்டத்தில் பல காணிகள் கை விடப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி பற் றைக் காடாக காட்சியளிக்கின்றன. இவற்றில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்பு ண்டு என வே இக்காணிகளின் உரிமையாளர்கள் இல் லாது பராமரிப்பிற்கு பொறுப்பாக உள்ள வர்கள் உடனடியாக இக்காணிகளை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறி னால் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண் டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலா ளர்கள்.) (ந)

## ஜனாதிபதித் தேர்தலில் அவசரப்பட்டு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட் டக்குழுவை நேற்று முன்தினமிரவு சந்தித்த போதே இந்தியத் தூதுவர் அசோக்காந் மேற் படி ஆலோசனையை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த் ராஜபக்ஷ வையா அல்லது சரத் பொன்சேகாவையா ஆதரிப்பது என்ற முடிபை எடுப்பதில் தீவிர மாக ஈடுபட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கடந்த சில நாட்களாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன் சேகாவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவை யும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினமிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன் றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் அடங்கிய குழுவை சந்தித்த இந்தியத் தூதுவர் அசோக்காந், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபை அவசரப்பட்டு எடுக்க வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிடம் கேட்டுக் கொண்டார்.

நிலைமை இதுவாக இருக்க, ஜனாதிபதி யின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, பாது காப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அடங்கிய அரச உயர் மட் டக்குழுவொன்று இன்று இந்தியாவுக்கு விரை கின்றது.

இந்தியா செல்லும் இக்குழு இந்திய வெளி யுறவு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு ஆலோ சகர் ஆகியோருடன் முக்கிய ஆலோசனை நடத் தும் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரச உயர்மட்டக் குழு இன்று இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னதாக நேற் றை தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் இந்தியாவுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் முடிபுகள் இந்தியாவின் எதிர்கால அரசியல் நலன்களில் காத்திரமான தாக்கத் தை ஏற்படுத்தும் என்பதால் என்றுமில்லாத வாறு இந்தியா, இலங்கையில் நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கவனம் செலுத் துவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளி யிட்டுள்ளனர். (ந-5)

**சிறப்பான ஆரம்பத்துடன்**

தரம் 1 முதல் O/L வரை தமிழ் மொழி மூல, ஆங்கில மொழி மூல வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-3880)

**1st IN Com, G.A.Q யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப் பட்டுள்ளன.
- A/L[s] கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாகச் செய்து தரப்படும்.
- புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

குறிப்பு:-B.A PART I யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்கட்கு:- நிர்வாகி

பீ.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3883)

**Un Employment Graduates Union Jaffna**

**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ்ப்பாணம்**

**வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்**

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 14.12.2009 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங் கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு.டக்ளஸ் தேவா னந்தா கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரி களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: எமது அறிவித்தல் இன்றி நடைபெறும் எந்த நிகழ்வுகளுக்கும் நாம் பொறுப்பல்ல.

தொடர்புக்கு: 077 844 9742

சி.வசீகரன்
தலைவர்
வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.

(4152)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.